ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ டிசம்பர். 16, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 72 ❖ ரூ.10

## கோடநாடு வழக்கில் பரபரப்பு 'எடப்பாடி பழனிசாமியை ஆஜராக சொல்லுங்கள்'

# அறிவுறுத்தல்

## சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பான பாதுகாப்புகளை வழங்கி வருகிறது: நீதிபதிகள்



**சென்னை, டிச. 16–**

**சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பான பாதுகாப்புகளை வழங்கி வருகிறது. அதனால் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க சொல்லுங்கள் என ஈபிஎஸ் தரப்பு வழக்கறிஞருக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் அறிவுறுத்தி உள்ளனர்.**

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் தொடர்புபடுத்தி வீடியோ வெளியிடப்பட்டது. இந்த விவகாரத்தில் டெல்லியை சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல் மற்றும் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019-ம் ஆண்டு எடப்பாடி பழனிசாமி மானநஷ்ட வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக வழக்கை மாஸ்டர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது எனவும், தமது வீட்டில் சாட்சியத்தை பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமெனவும் கோரி எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை ஏற்ற உயர் நீதிமன்றம், நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்தோடு, இந்த நடைமுறையை அவரது வீட்டில் மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஆணையராக எஸ்.கார்த்திகை பாலனை நியமித்தது. இந்த உத்தரவை எதிர்த்து சாமுவேல் மேத்யூ சாமுவேல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு வழக்கு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், முகமது ஷஃபிக் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அப்போது, மாஸ்டர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி ஆஜராவதில் இருந்து விலக்களிக்க வேண்டும் எனக் கூறக்கூடிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என தெரிவித்த நீதிபதிகள், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என ஏற்கெனவே கூறியதை மீண்டும் நினைவுப்படுத்துவதாக கூறினர். மேலும், சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பான பாதுகாப்புகளை வழங்கி வருவதால், எடப்பாடி பழனிசாமி மாஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தல் வழங்க அவர் தரப்பு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜனவரி 5-ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான ஊர்திகள் : முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

சென்னை, டிச. 16–

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான ஊர்திகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, "காக்கும் பணி எங்கள் பணி" என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். பேரழிவை ஏற்படுத்தும் தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட அரசு பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில், பலமாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை சமாளிக்க 54 மீட்டர் உயரம் வரை வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், மலைப்பாங்கான இடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களை கையாள்வதற்கு நான்கு சக்கர இயக்கம் கொண்ட 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், தீ விபத்திடங்களில் ஏற்படும் தண்ணீர் தேவையினை உடனடியாக சமாளிக்க 12 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், பழுதடைந்த நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவை 63.30 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஊர்திகளை முதலமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் ப. அமுதா, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் என். ப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல்வேறு முடிவுற்றப் பணிகளை சட்டத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்

**புதுக்கோட்டை ,டிச.16–**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல்வேறு முடிவுற்றப் பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல்தடுப்புசட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்தார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்டுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்களின் வசதிக்காக சாலைவசதி, மின்வசதி, குடிநீர்வசதி உள்ளிட்டவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல்வேறு முடிவுற்றப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

திருமயம் ஊராட்சி ஒன்றியம், மேலப்பனையூர் ஊராட்சி, பொன்னனூரில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.7.17 இலட்சம் மதிப்பீட்டிலும், கண்ணனூர் ஊராட்சியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.6.75 இலட்சம் மதிப்பீட்டிலும், மேலத்துருவாசபுரம் அம்பலக்காரர் வீதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.4.86 லட்சம் மதிப்பீட்டில் 80 மீட்டர் நீளமுடைய சிமெண்ட் சாலை பணியினையும், கீழத்துவாசபுலத்தில் ஆதிதிராவிடர் காலனியில் ரூ.2.43 லட்சம் மதிப்பீட்டில் 40 மீட்டர் நீளமுடைய சிமெண்ட் சாலை பணியினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நமக்குநாமேதிட்டத்தின்கீழ் கற்பக விநாயகா அறக்கட்டளையின் நிதியுதவியுடன் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலைப் பணியினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.90 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும் திறந்து வைத்து, வி.லெட்சுமிபுரம் ஊராட்சி, சிவன் கோவில் வளாகத்தில் 250 மரக்கன்றுகள் நடும் பணியினையும் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர;ந்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, மேமணப்பட்டியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிலும், நெறிஞ்சிக்குடி ஊராட்சி, பாலப்பட்டியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.6.48 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய மின்மாற்றிகள் திறந்து வைக்கப்பட்டது.

திருமயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் முன்னேறிய பகுதிகளாக மாற்றம் செய்திடும் வகையில் இப்பகுதிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனதெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மின்சார வாரிய செயற்பொறியாளர் ஆனந்தாய், உதவி செயற்பொறியாளர் ராமனாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், நளினி, உதவி மின் பொறியாளர் சாத்தையா, வட்டாட்சியர் புவியரசன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் ராமநாதன் (எ) ராமசாமி (வி.லெட்சுமிபுரம்), சண்முகசுந்தரம் (கண்ணனூர்), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## புதுக்கோட்டை டெல்லி பப்ளிக் பள்ளியில் அறிவியல் கண்காட்சி எம்.எல்.ஏ முத்துராஜா துவங்கி வைத்தார்

புதுக்கோட்டை, டிச.16–

புதுக்கோட்டை டெல்லி பப்ளிக் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, நகர் மன்றத் தலைவி திலகவதி, கவிஞர் தங்கம்மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை திருச்சி சாலை வேலைவாய்ப்பு அலுவலகம் அருகிலுள்ள டெல்லி பப்ளிக் -சிபிஎஸ் இ- பள்ளியில் அறிவியல் கண்காட்சி வெகுசிறப்பாக நடைபெற்றது, அறிவியல் கண்காட்சியின் விழாவிற்கு பள்ளியின் சேர்மன் டாக்டர் எம்.நாகராஜன் தலைமை தாங்கினார், பள்ளியின் இயக்குனர் பார்கவி கிருஷ்ணன் முன்னிலை வகித்து அனைவரையும் வரவேற்றார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை .முத்துராஜா அறிவியல் கண்காட்சியினை குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்து பேசினார், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவி திலகவதிசெந்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளியின் தாளாளர் கவிஞர் தங்கம்மூர்த்தி உள்ளிட்ட பிரமுகர்கள் பல்வேறு பள்ளிகளின் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் கண்காட்சியினை பார்வையிட்டனர் மாணவர் மாணவிகள் படைப்பான, வாட்டர் வெல், வாட்டர் சைக்கிள், குளோபல் வார்மிங், கிளைமேட் சேஞ்ச் 3-டி, விவசாயம், ஏ டி.எம் வாக்கிங் மாடல், எலக்ட்ரிக் ஜெனரேட்டர், விண்வெளி ராக்கெட் உள்ளிட்ட ஏராளமான படைப்புகளை மாணவர்கள் மாணவர்கள் கண்காட்சியில் அமைத்து வைத்திருந்தனர், சிறப்பு விருந்தினர்கள் இதனை பார்வையிட்டு மாணவர்களை பாராட்டி சென்றனர்.

பல்வேறு பள்ளிகளினுடைய மாணவ மாணவியர்கள் ஆசிரியர் ஆசிரியைகள் வருகை தந்து கண்காட்சியினை பார்வையிட்டு மகிழ்ந்தனர் முன்னதாக அறிவியல் கண்காட்சியில் மாணவர்களுடைய பல்வேறு நடனங்கள் ஸ்கேட்டிங் உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தது பெற்றோர்கள் பொதுமக்கள் வருகை தந்து கண்காட்சியினை பார்வையிட்டனர் வருகை தந்த அனைவரையும் பள்ளியின் முதல்வர் ஆசிரியர் ஆசிரியைகள் வரவேற்றனர் அறிவியல் கண்காட்சியினை சிறப்பாக பள்ளியின் முதல்வர் ஆசிரியர் ஆசிரியைகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## கந்தர்வக்கோட்டை அருகே கர்ப்பிணிப்பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு

ஆதனக்கோட்டை, டிச.16–

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் தச்சன்குறிச்சி ஊராட்சி சவேரியார்பட்டி கிராமத்தில் சமுதாய வளைகாப்பு விழா ஊராட்சி மன்ற தலைவர் ராணி அந்தோணிசாமி தலைமையில் நடைபெற்றது. இந்த வளைகாப்பு விழாவில் கர்ப்பிணிப்பெண்களுக்கு கண்ணத்தில் சந்தனம் குங்குமம் பூசி கையில் வளையல்கள் அணிவித்து பழங்கள் இனிப்பு மற்றும் கார வகைகள் வழங்கி கர்ப்பிணிப்பெண்களை மகிழ்வித்தனர்.



நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் ரேவதி செய்திருந்தார். சமுதாயவளைகாப்புவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கர்ப்பிணி பெண்களுக்கு உடல் நலம் மன நலம் குறித்த விழிப்புணர்வை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்பு துறை முதன்மை குடிமை மருத்துவர் கே.சரவணன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு நல்ல உடல் நலத்துக்கு உடல் தூய்மை, உடற்பயிற்சி, சத்தான உணவு, உறக்கம், முறையான கர்ப்பகால பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் மனநலத்துடன் தாய் இருந்தால்தான் பிறக்கும் குழந்தையும் நல்ல மனநலத்தோடு ஆரோக்கியமாக பிறக்கும் என்பதால் திருக்குறள் மூலமும் வேதாத்திரிமகரிஷி கவிதை வாயிலாகவும் விளக்கிக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் புதுநகர் சுகாதார ஆய்வாளர் திருநாவுக்கரசு, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி பயிற்சி மருத்துவர்கள் சஞ்சீவ் சந்தானலக்ஷ்மி மற்றும் கிராம பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

## கிராமிய அஞ்சல் ஊழியர்கள் சங்கம் சார்பில் அறந்தாங்கியில் தபால்நிலையம் முன்பு 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

அறந்தாங்கி,டிச.16–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் அகில இந்திய கிராமிய அஞ்சல் ஊழியர் சங்கத்தின் தலைவர் அடைக்கலம் தலைமையில்



அகில இந்திய கிராமிய அஞ்சல் ஊழியர் சங்கம் தேசிய கிராமிய அஞ்சல் ஊழியர் சங்கம் அகில இந்திய அஞ்சல் தொழிலாளர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்கள் ஒன்றிணைந்து ஜி டி எஸ் ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை வென்றெடுக்க டிசம்பர்-12 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர், நேற்று நான்காம் நாளாக போராட்டம் அறந்தாங்கி தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்றது.

அதில் GDS ஊழியர்களுக்கு எட்டு மணி நேரம் வேலை வழங்கி பென்சன் உள்ளிட்ட இலாக்கா அந்தஸ்து வழங்குவது, 180 நாட்கள் விடுப்பில் சேமித்து வழங்க, ஜிடிஎஸ் ஊழியர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதிகளை விரிவு படுத்த வேண்டும், கிளை அஞ்சலகங்களுக்கு லேப்டாப் பிரிண்டர் வழங்கி 5ஜி அலைக்கற்றை வழங்கிட வேண்டும். உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மூன்று சங்கங்களை சேர்ந்த 50-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு கோரிக்கை நிறைவேற்ற வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் சூரியபிரகாசம், குமரேசன், வீரையா, சந்திரசேகரன் ஹரிராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன்று

16-12-23



சதுர்த்தி விரதம்

சக வருடம் 1945 மார்கசீர்ஷம் 25

உணவில் சுண்டைக்காய் சேர்த்துக்கொண்டால் வயிற்று புழுக்களை நீக்கலாம்

| சோபகிருது கார்த்திகை 30 | DEC - SAT சனி | ஜமா அத்துல் ஆகிர் 2 வளர்பிறை 350 / 015 |
|---|---|---|

வளர். சதுர்த்தி 41.55 (மா. 11.09) உத்திராடம் 07.34 (கா. 09.25) தியாஜ் 17.09 அகஸ் 28.30 சித்த. சதுர்த்தி விரதம். திருவோண விரதம். பதரி கௌரி விரதம். வர சதுர்த்தி. ஷடசீதி புண்ணிய காலம். ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் ஆண்டாள் திருக்கோலமாய் காட்சி. மிலட்டூர் விநாயகர் பவனி.

| | நல்லநேரம் | கௌரி.நல். | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; விருச்சிக லக்கனம் இருப்பு நா. 0 வி. 10; சந்திராஷ்டமம் திருவாதிரை

கரணம் : 12-1.30; சூரிய உதயம் : 6.21

நம்புநேவரே நிச்சயம் வெற்றி பெறுகிறோன்

இராசிபலன்
மேஷம் - சுகம்
ரிஷபம் - சாதனை
மிதுனம் - முயற்சி
கடகம் - பெருமை
சிம்மம் - அன்பு
கன்னி - ஆர்வம்
துலாம் - சோதனை
விருச்சி - சிரமம்
தனுசு - நன்மை
மகரம் - சுபம்
கும்பம் - வருத்தம்
மீனம் - துணிச்சல்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

வேண்டாம் என்று தூக்கி
ஏறியப்பட்ட விதை கூட மரமாக
வளர்ந்து வருகிறது..

உன்னை வேண்டாம் என்று
தூக்கி எறிந்தவர் மத்தியில்
இருந்து எழுந்து வா!

வாழ்க்கையில் உன்னை வெல்ல
யாரும் இல்லை!!




புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை- 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,820 | Rs. 6,290 |


## 'புதுச்சேரி பள்ளி மாணவர்களுக்கு ரூ.5 கோடியில் தரமற்ற சைக்கிள்கள்' – முதல்வரிடம் அதிமுக புகார்



புதுச்சேரி : டிச. 16, 'புதுச்சேரியில் பள்ளி மாணவர்களுக்கு ரூ.5 கோடியில் தரமற்ற சைக்கிள்கள் விநியோகம் நடந்துள்ளது. இம்முறைகேடு தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்' என்று அம்மாநில முதல்வர் ரங்கசாமியிடம் அதிமுக புகார் அளித்துள்ளது.

புதுவை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டுக்கான சைக்கிள் கடந்த அக்டோபர் மாதம் வழங்கப்பட்டது. தரமற்ற சைக்கிள்களை அரசு வழங்கியிருப்பதாக நேற்று அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் புகார் அளித்தார். முன்னதாக, புதுவை சட்டப்பேரவைக்கு தள்ளுவண்டியில் 3 சைக்கிள்களை அவர் எடுத்து வந்தார். அப்போது சட்டப்பேரவைக்கு வந்த பேரவைத் தலைவர் செல்வத்திடம் சைக்கிள்களை காண்பித்து புகார் தெரிவித்தார். தொடர்ந்து சட்டப்பேரவையில் இருந்த முதல்வர் ரங்கசாமியை சந்தித்து அதிமுக நிர்வாகிகள் புகார் மனு அளித்தனர்.

அந்த மனுவில், "புதுவை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9-ம் வகுப்பு படிக்கும் அரசு பள்ளி மாணவர்களுக்கும் இலவச சைக்கிள் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு மொத்தம் 9,390 மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக சுமார் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிதியில் ரூ.5 ஆயிரம் அளவில் தரமான சைக்கிள் வழங்கியிருக்கலாம். ஆனால், ரூ.12 ஆயிரத்துக்கு தரமற்ற சைக்கிள்கள் வாங்கப்பட்டுள்ளன.

சைக்கிள் வழங்கும்போதே துருப்பிடித்தும், உடைந்தும் உள்ளன. இந்தசைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்க மாட்டோம் என காரைக்காலில் எம்.எல்.ஏ-க்கள் நிகழ்ச்சியை புறக்கணித்துள்ளனர். பஞ்சாப்பை சேர்ந்த நிறுவனம் இந்த தரமற்ற சைக்கிளை வழங்கியுள்ளது. இவற்றை மாணவர்கள் ரூபாய் ஆயிரம், ரூபாய் ஆயிரத்து 500 என பழைய இரும்பு கடைகளில் வேறு வழியின்றி விற்றுள்ளனர்.

அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் சைக்கிள் தரமுள்ளதா என்பதை எந்த அரசு அதிகாரியாவது ஆய்வு செய்தார்களா? தற்போது பள்ளி மாணவர்களுக்கு ரூ.5 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ள சைக்கிள்கள் உபயோகப் படுத்த முடியாமல் உள்ளதற்கு பொறுப்பேற்கும் அதிகாரி யார்? அரசு துறைகளில் இதுபோன்ற தவறுகள் நடக்கும்போது உரிய நடவடிக்கை எடுக்காததால் முறைகேடு என்பதே அரசின் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. இந்த விலையில்லா சைக்கிள் வழங்கப்படும் இத்திட்டத்தில் நடைபெற்ற முறைகேடு சம்பந்தமாக துறை ரீதியான நேர்மையான அதிகாரிகள் தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## கிராம அளவில் எட்டுவகையான பணிகளை மேற்கொள்ள பாஜக தீவிரம் பெருங்களூரில் ஆலோசனைக் கூட்டம்



புதுக்கோட்டை , டிச. 16–

புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், சக்தி கேந்திர பொறுப்பாளர்கள், மற்றும் கிளைத் தலைவர்களுக்கான சிறப்புக் கூட்டம் நேற்று பெருங்களூர் ஸ்ரீ பிடாரி அம்மன் திருமண மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் பெரிகுமார் தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டைமேற்கு மாவட்ட பாஜக பொது செயலாளர் ஏவிசிசி கணேசன், மாவட்ட துணைத்தலைவர் ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாஜக தலைமை அறிவித்துள்ள எட்டுவகையான பணிகளுக்கு குக்கிராம அளவில் குழுக்கள் அமைப்பது,கட்சிக்கு புதிய உறுப்பினர் சேர்ப்பது, வீடு தோறும் சென்று மக்களை சந்திப்பது உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் குறித்து கூட்டத்தில் தெளிவுரைகள் வழங்கி ஏவிசிசி கணேசன் பேசினார்.

அயோத்தி ஸ்ரீராமர் கோவில் ஸ்தல வரலாறு குறித்து விஸ்வ ஹிந்து பரிஷத் மாவட்ட துணைதலைவர் தங்கராஜ் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பாஜக ஆன்மீகப்பிரிவு மாவட்ட தலைவர் செல்வராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர் மயில்சுதாகர்,விவசாய அணி முன்னாள் மாவட்ட தலைவர் முள்ளூர் பாண்டியராஜன், பிரவீன்குமார், கூட்டுறவு பிரிவு மாவட்ட தலைவர் சாமி ராஜ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள், ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள், கிளைத்தலைவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் ஒன்றிய பொது செயலாளர் சேகர் நன்றி கூறினார்.




கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


## பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகளின் கொள்ளளவை உயர்த்த நடவடிக்கை : துரைமுருகன் தகவல்

*வேலூர், டிச. 16–*

*பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகளின் கொள்ளளவு நீர்மட்டத்தைஉயர்த்தகுழு அமைக்கப்பட்டுள்ளதாக நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் தெரிவித்தார்.*

*வேலூர் மாவட்டம் காட்பாடி அருகேயுள்ள அம்முண்டியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இங்கு, நடப்பாண்டுக்கான கரும்பு அரவை பணியை நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடங்கி வைத்தனர். பின்னர்,செய்தியாளர்கள் சந்திப்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் கூறும்போது, ''சென்னையைச் சுற்றி நீர் நிலைகளை உருவாக்க தமிழக அரசு நீண்ட காலமாக ஆலோசித்து வருகிறது. ராமனஞ்சேரியில் மிகப்பெரிய தடுப்பணை கட்ட ஆலோசனை செய்யப்பட்டது. ஆனால், அங்குள்ள மக்கள் போதிய அளவு ஒத்துழைப்பு அளிக்கவில்லை.*

*மற்றொரு இடமாக திருக்கழுக்குன்றம் ஏரியில் கடந்த ஆட்சியாளர்கள் தடுப்பணைகள் கட்ட முயற்சி செய்தும் முடியவில்லை. எனவே, சென்னை சுற்றியுள்ள*



*பூண்டி, செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளில் ஒரு அடி அளவுக்கு கொள்ளளவு நீர்மட்டத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.*

*அந்த குழு அறிக்கையின்படி அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னை சுற்றியுள்ள நீர் நிலைகளை ஆக்கிரமித்துள்ள பகுதிகள் அதிகளவில் அகற்றப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்புகளை அகற்றும் பட்சத்தில் அரசியல் தலையீடும் உள்ளது. எந்தளவுக்கு துணிவு இருந்தால் நாடாளுமன்றத்தில் இளைஞர்கள் கீழே குதித்து புகை குண்டுகளை வீசி இருப்பார்கள். இந்த செயல் கண்டிக்கத்தக்கது. மிக்ஜாம் புயல் நிவாரண நிதியை உயர்த்தி வழங்குவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் முடிவெடுப்பார்'' என்றார். அப்போது, அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

## ராஜஸ்தான் முதல்வராக பஜன்லால் சர்மா பதவியேற்பு – மோடி, அமித்ஷா பங்கேற்பு



ஜெய்ப்பூர் : டிச. 16, ராஜஸ்தான் மாநில முதல்வராக பஜன்லால் சர்மா நேற்று பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு அம்மாநில ஆளுநர் கல்ராஜ் மிஸ்ரா பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். பஜன்லால் சர்மா தனது 56–வது பிறந்தநாளான நேற்று முதல்வராக பதவியேற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தானில் சமீபத்தில் நடந்துமுடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தேர்தல் நடந்த 199 தொகுதிகளில் பாஜக 115 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கான தகுதியைப் பெற்றது. இதையடுத்து நேற்று ஜெய்ப்பூரில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஆல்பர்ட் வளாகத்தில் இந்த பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், ராஜஸ்தான் மாநிலத்தின் முதல்வராக பஜன்லால் சர்மா பதவியேற்றார். அவருக்கு அம்மாநில ஆளுநர் கல்ராஜ் மிஸ்ரா பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். அவருடன் தியா குமாரி, பிரேம் சந்த் பைரவா ஆகியோர் துணை முதல்வர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

இந்தப் பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஜே.பி.நட்டா பங்கேற்றனர். மேலும், கோவா முதல்வர் பிரமோத் சவந்த், திரிபுரா முதல்வர் மாணிக் சஹா, மகாராஷ்டிர மாநில முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

முதல்வராக பதவியேற்றுள்ள பஜன்லால் சர்மா, முதல்முறையாக எம்எல்ஏ ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், ராஜஸ்தானின் பரத்பூர் பகுதியை சேர்ந்தவர். இளம் வயதிலேயே ஆர்எஸ்எஸ் அமைப்பில் சேர்ந்து தீவிரமாக பணியாற்றினார். பாஜக மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தில் முக்கிய பதவிகளை வகித்தார். அரசியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறார்.

துணை முதல்வராக பதவியேற்றுள்ள தியா குமாரி, ஜெய்ப்பூர் சமஸ்தானத்தின் கடைசி மன்னராக இருந்த இரண்டாம் மான் சிங்கின் மகன் பவானி சிங்கின் ஒரே மகள் ஆவார். இவர் ராஜபுத் (ஓபிசி) சமூகத்தை சேர்ந்தவர். இன்னொரு துணை முதல்வர் பிரேம் சந்த் பைரவா தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர். முதல்வர் பஜன்லால் சர்மா, பிராமண சமூகத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மதுரை மாவட்டம் எழுமலையில் தேசிய இளையோர் கூட்டுறவு சங்க கிளை துவக்க விழா உசிலை ரோடு, உதயா காம்ப்ளக்ஸ் முதல் மாடியில் துவக்க விழா நடைபெற்றது. தலைமை மண்டலத் தலைவர் கதலி நரசிங்க பெருமாள், முன்னிலை பொது மேலாளர் கேரளா பாலக்காடு சேதுராமன், மாநில இயக்குனர் திரு. பாலு நாயர் இவர்களுடன் எழுமலை கிளைத் தலைவர் பொன். கருணாநிதி, செயலாளர் உதயசந்திரன், துணைத் தலைவர் வரதராஜன், செயலாளர் உதயச்சந்திரன், டைரக்டர் பொன். திருமலை ராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முகநூலில் பழகி ஐந்து, ஆறு மாதங்கள் திட்டமிட்டு நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்தியுள்ளனர் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம்



பரமக்குடி : டிச. 16, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாநிலத் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் இல்ல திருமண விழா ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நடைபெற்றது.

முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், எம்.எல்.ஏ.க்கள் முருகேசன், மாங்குடி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர்களிடம் பேசுகையில்; நாடாளுமன்றத்தில் மக்களவையில் நடந்த தாக்குதல் மத்திய அரசின் கவனக்குறைவை காட்டுகிறது. 22 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் டிசம்பர் மாதம் 13 ஆம் தேதி பயங்கரவாதிகளின் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மீண்டும் டிசம்பர் 13 ஆம் தேதி தாக்குதல் நடத்துவோம் என எச்சரித்தனர்.

இது பயங்கரவாத தாக்குதல் அல்ல. இருந்தாலும் இது ஒரு தாக்குதல் தான். ஐந்து முதல் ஆறு நபர்கள் வெல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மகாராஷ்டிரா, பீகார், கர்நாடகா என வெல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே இடத்தில் ஒன்றுகூடி தங்கி யாருடைய தூண்டுதலின் பேரில் தாக்குதல் செய்திருக்கிறார்கள் என்றால் உளவுத்துறை என்ன செய்கிறது?

மூன்றடுக்கு பாதுகாப்பு, நான்கடுக்கு பாதுகாப்பு என்று சொல்கிறார்களே, தவிர எந்த அடுக்கு பாதுகாப்போம். இந்த தாக்குதலை தடுக்க முடியவில்லையே. உளவுத்துறையை தாண்டி, மத்தியரிசர்வ்போலீசை தாண்டி, டெல்லி காவல் துறையை தாண்டி, நாடாளுமன்ற பாதுகாப்பு துறையை தாண்டி நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து பார்வையாளர்கள் அரங்கம் வரை சென்று அங்கிருந்த பாதுகாவலர்களை மீறி அறைக்குள் குதித்து கண்ணீர் புகை வெடியை வெடிக்கிறார்கள் என்றால், இது முழுக்க முழுக்க அரசினுடைய, அரசின் அங்கங்களுடைய கவனக்குறைவை காட்டுகிறது. வெல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் முகநூலில் நண்பர்களாகி தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள் என்றால் இது நான்கு, ஐந்து மாதங்களாக திட்டமிடப்பட்டிருக்கும்.

15 அடி குதிப்பது என்பது எளிதல்ல. கை, கால்களை உடைத்துக் கொள்ளாமல் பயிற்சி பெற்றவர்கள் தான் 15 அடி குதிக்க முடியும். நான்கு, ஐந்து மாதங்கள் பயிற்சி இல்லாமல், திட்டமில்லாமல் இந்த தாக்குதல் நடத்தி இருக்க முடியாது இது பயங்கரவாத தாக்குதல் அல்ல. அரசியல் ரீதியாக எதிர்ப்பை தெரிவிப்பதற்காக தாக்குதல் செய்து இருக்கிறார்கள். ஐந்து, ஆறு மாதங்கள் முகநூலில் நண்பர்களாகி பயிற்சி பெற்றதை உளவுத்துறை கண்டுபிடிக்கவில்லை என்பது வியப்பாக உள்ளது என பேட்டியளித்தார்.

## சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் வெடி மருந்து கலக்கும்போது பணியின் போது விபத்து : ஒருவர் உயிரிழப்பு



*விருதுநகர் : டிச. 16, விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பனையடிப்பட்டியில் பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பனையடிப்பட்டி கிராமத்தில் ஜெயபாலனுக்கு சொந்தமான தனியார் பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்த ஆலையில் கண்டியாபுரத்தைச் சேர்ந்த சண்முகராஜ் வேலை செய்து வந்தார். அவர் வழக்கம் போல நேற்று காலை 7 மணிக்கு வெடி மருந்து கலக்கி கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.*

*அப்போது மருந்தில் ஏற்பட்ட உராய்வின் காரணமாக திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் அங்கிருந்த பட்டாசுகள் வெடித்து சிதறியுள்ளன. இந்த விபத்தில் சண்முகராஜ் (36) சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தார். இதைப்பார்த்த பொதுமக்கள் தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் அளித்த நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். அங்கு ஒரு அரை முழுவதும் தரைமட்டமாகி இருந்தது. இதில் உயிரிழந்த சண்முகராஜ்உடலைமீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.*

## வெள்ள நிவாரணம் ரூ.6,000 ரொக்கமாக வழங்கலாம் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை : டிச. 16–

மக்களுக்கு வெள்ள நிவாரணம் உடனடி தேவை தெரிவித்துள்ள சென்னை உயர்நீதிமன்றம், இடைக்கால உத்தர பிறப்பித்து அதை தாமதப்படுத்த முடியாது என கூறி இடைக்கால உத்தரவு பிறப்பிக்க முடியாது. அதனால் வெள்ள நிவாரண நிதியினை ரொக்கமாக வழங்கலாம் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த 37 லட்சம் குடும்பங்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்க அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ரொக்கமாக வழங்கப்படும் இந்த நிவாரணத் தொகையை சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தக் கோரி முன்னாள் ராணுவ வீரர் ராமதாஸ் என்பவரும், நிவாரணத் தொகையை அதிகரித்து வங்கிக் கணக்கில் வழங்க வேண்டும் என சட்டக் கல்லூரி மாணவர் செல்வகுமார் என்பவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி சஞ்சய் கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி அடங்கி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ரொக்கமாக நிவாரணத்தை வழங்கும்போது



முறையானவர்களுக்கு சென்றடையாது என்றும், கடந்த 2015-ம் ஆண்டு பெரு வெள்ளத்தின் நிவாரணத் தொகை வங்கி கணக்கில் தான் செலுத்தப்பட்டது என்றும், டோக்கன் முறை மூலம் நிவாரணம் வழங்குவது தவறாக பயன்படுத்தக்கூடும் என்றும், பலர் ஒரு முறைக்கு மேல் நிவாரணம் நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கிறது என்றும் கூறி, அதனால் சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்த உத்தரவிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

அதற்கு அரசு தரப்பில், ஏற்கெனவே 37 லட்சம் குடும்பத்தினர் அடையாளம் காணப்பட்டு ள்ளதாகவும், டோக்கன்கள் வழங்கப்பட்டு விட்டதாகவும், நாளையிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தலைமை நீதிபதி அமர்வு, வெள்ள நிவாரணம் என்பது உடனடியாக வழங்க வேண்டியது, ஏழை மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நிவாரணம் வழங்குவதை தாமதப்படுத்த முடியாது. அதை மறுக்க முடியாது, நிவாரணத்தை முடக்க முடியாது என்று தெரிவித்தது. மேலும் நிவாரணம் வழங்குவது தற்போதைய தருணத்தில் உடனடி தேவை என்பதால் இந்த வழக்கில் எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க விரும்பவில்லை என்று நீதிபதிகள் திட்டவட்டமாக கூறிவிட்டனர்.

நிவாரணம் வழங்குவதை தாமதப்படுத்துவது மக்கள் நலனுக்கு உகந்ததல்ல என்றும், உண்மை பயனாளிகளுக்கு நிவாரணம் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று அரசுக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், வழக்கின் விசாரணையை ஜனவரி 5-ம் தேதிக்கு தள்ளி வைத்தனர். அன்றைய தினம் நிவாரணம் வழங்கியது குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

### சென்னை ஏர்ணாவூரில் கச்சா எண்ணெய் படலத்தால்

# பாதிக்கப்பட்ட வீடுகளை சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் ஆய்வு

சென்னை, டிச,16

மிக்ஜாம் புயல் தாக்கத்தால் ஏற்பட்ட மழை நீரில் கச்சா எண்ணெய் கலந்து வந்ததால் எர்ணாவூர் ஆதிதிராவிடர் காலனி பிருந்தாவன் நகர், கிரிஜா நகர், உள்ளிட்ட பகுதிகளில் குடியிருப்புகள் புகுந்து பெருத்த பாதிப்பை ஏற்படுத்தியது .



இதனை அடுத்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் எண்ணெய் படலம் பாதித்த ஆதிதிராவிடர் காலனி குடியிருப்பு பகுதியில் வீடுகளுக்குள் சென்று ஆய்வு மேற்கொண்டார் வீட்டில் சேதமடைந்த பொருட்கள் குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட வீடுகளில் எந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து திருவொற்றியூர் மண்டல கண்காணிப்பு அலுவலர் கந்தசாமி கேட்டறிந்தார். ஆய்வின் போது, திருவொற்றியூர் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு மண்டல அலுவலர் நவேந்திரன் , மாமன்ற உறுப்பினர் ஜெயராமன் உடன் இருந்தனர்.

# கொடி கம்பத்தில் மின்சாரம் பாய்ந்து கூலித் தொழிலாளி உயிரிழப்பு

சென்னை, டிச,16

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை மணலியில் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சியில் இரும்பு கம்பியில் கட்சியின் கொடியை கட்டியதாக கூறப்படுகின்றது.



இதில் மின்சார வயரில் கம்பி பட்டதில் மணலி சின்ன சேக்காடு சேர்ந்த எல்லப்பன் (21) மயங்கி விழுந்தவர் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டுச் சென்று அனுமதித்த பொழுது அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியில் இறந்து விட்டதாக தெரிவித்தனர் இச்சம்பம் தொடர்பாக மணலி போலீசார் வழக்கு பதிவு செய்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# பெற்றோரை இழந்த பள்ளி சிறுவர்களுக்கு வீடு கட்டி கொடுத்த சிறார் தொண்டு நிறுவனம் பொதுமக்கள் நெகிழ்ச்சி





தரங்கம்பாடி, டிச. 16–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, செம்பனார்கோயில் ஒன்றியம், எடுத்துக்கட்டி சாத்தனூர் ஊராட்சி, புதனூர் கிராமம் காளியம்மன் கோயில் தெருவில் வசித்து வரும் சந்திரா மூர்த்தி என்பவர் தனது பேரக்குழந்தைகளுடன் குடிசை வீட்டில் வழி சீட்டு வந்தவருக்கு சில்ட்ரன்ஸ் தொண்டு நிறுவனம் மூலம் புதிய வீடு கட்டி குடி குடியமர்த்தி உள்ளது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது .

வேதை மாநிலத்தை சார்ந்த சந்திரா- மூர்த்தி என்பவர் கடந்த 25 ஆண்டுகளாக எடுத்துக்கட்டி சாத்தனூர் ஊராட்சியில் உள்ள புதனூர் கிராமத்தில் தனியார் செங்கல் சூளையில் பணியாற்றி தனது மகள் தமிழரசி குழந்தையான சதீஷ் (10), தினேஷ் (8) இரண்டு பேரன்களை மிகவும் சிரமப்பட்டு பராமரித்து வந்தார். இவருக்கென்று சொந்தமாக வீடு என்பது இல்லாமல் ஓலை குடிசை வீட்டில் வசித்து வந்த நிலையில். இவர் வசிக்கும் வீடு இயற்கை பேரிடர் மற்றும் மழை பெய்யும் பொழுது பெரிதும் பாதிக்கப்பட்டு வந்துள்ளார்.

சந்திரா, தமிழரசி, கணவர் மூர்த்தி, இரண்டு குழந்தைகள் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழரசி மூன்றாவது பிரசவத்தின் போது இறந்துள்ளார். தமிழரசியின் கணவர் அத்துடன் குழந்தைகளை கைவிட்டு தலைமாறாவாகி சென்ற நிலையில் இரண்டு பேரக் குழந்தைகளுடன் குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தார் சந்திரா. புதனூரில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் சதீஷ் ஐந்தாம் வகுப்பும், தினேஷ் மூன்றாம் வகுப்பு படித்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களுக்கு விடியல் இல்லாதவை சமூக ஆர்வலர் தினேஷ் என்பவரின் மூலம் அறிந்த பொறையாரில் உள்ள தி லைஃப் ஆஃப் சில்ட்ரன்ஸ் ட்ரஸ்டின் உரிமையாளர் பிரபு தனது ட்ரஸ்டின் மூலம் ரூ.3 லட்சத்திற்கு வீடு அமைத்து வயதான மூதாட்டி சந்திரா மற்றும் இரண்டு பள்ளி மாணவர்கள் சதீஷ் தினேஷ் ஆகியோர்கள் ஊராட்சிமன்ற தலைவர் பைலட், புதனூர் அரசு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் அமுதா மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் வழங்கி உள்ளதுபெரும்நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இதுகுறித்து சந்திரா மற்றும் குழந்தைகள் இருவரும் தங்களுக்கு வீடு கட்டி கொடுத்த ட்ரஸ்டின் உரிமையாளர் பிரபு மற்றும் இத்தகவலை பிரபுவுக்கு தெரியப்படுத்திய ஊராட்சி மன்ற தலைவர் பைலட், சமூக ஆர்வலர் தினேஷ் பள்ளி தலைமை ஆசிரியர் அமுதா ஆகியோர்களுக்கு சந்திரா மற்றும் பேரக்குழந்தைகள் அக்கிராம பொதுமக்கள் நன்றிகளை தெரிவித்தனர்.

### திருச்சி பிரணவ் ஜுவல்லரி மோசடியில்

# நடிகர் பிரகாஷ்ராஜுக்கு தொடர்பில்லை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் தகவல்

சென்னை : டிச. 16–

திருச்சி பிரணவ் ஜுவல்லரி மோசடியில் நடிகர் பிரகாஷ்ராஜுக்கு தொடர்பில்லை என பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர்.




திருச்சியை தலைமை இடமாக கொண்ட பிரணவ் ஜுவல்லரி சென்னை, கோவை, ஈரோடு, தஞ்சாவூர், நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களில் இயங்கி வந்தது. இந்த கடைகளுக்கு திருச்சியை சேர்ந்த மதன் மற்றும் அவரது மனைவி கார்த்திகா ஆகிய இருவரும் இயக்குனர்களாக உள்ளனர். இக்கடையில் நகைச்சீட்டுகள் மற்றும் முதலீட்டு திட்டம் என்ற பெயரில் பொதுமக்களை ஏமாற்றி அவர்களிடம் இருந்து சுமார் 100 கோடி வசூலித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த திருச்சி பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீசார், கடந்த அக்டோபர் 19-ம் தேதி அந்தக் கடைக்கு சொந்தமான இடங்களில் தமிழ்நாடு முழுவதும் சோதனை நடத்தினர். இதில், முக்கிய ஆவணங்கள், கணக்கில் வராத சுமார் ரூ.23.70 லட்சம் மற்றும் 11.60 கிலோ தங்கதை அமலாக்கத்துறை பறிமுதல் செய்தது. இதனை தொடர்ந்து அந்நிறுவன உரிமையாளர்கள் மதன் செல்வராஜ், அவரது மனைவி கார்த்திகா ஆகியோர் மீது பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் வழக்குகள் பதிந்து லுக் அவுட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு 2 பேரையும் தேடி வந்தனர்.

இந்நிலையில் கடந்த 7ம் தேதி மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மதுரை மாவட்ட முதலீட்டாளர் நலன் பாதுகாப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் மதன் செல்வராஜ் சரணடைந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜோதி, டிசம்பர் 21ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க உத்தரவிட்டார். பின்னர் அவரை போலீசார் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். பின்னர் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் நடிகர் பிரகாஷ் ராஜ் விளம்பரத்தில் மட்டுமே நடித்ததும், அவருக்கும் இந்த நிறுவனத்தின் முதலீடு, மோசடியில் எந்தவித தொடர்பும் இல்லை எனவும் தெரிய வந்திருப்பதாக போலீசார் தெரிவித்துள்ளனர். நடிகர் பிரகாஷ்ராஜ் விளம்பரத்தில் மட்டுமே நடித்ததாகவும், நிறுவனத்தில் எந்த முதலீடும் செய்யவில்லை என போலீஸ் தகவல் தெரிவித்துள்ளனர்.



▶ செங்கல்பட்டு மாவட்டம் லத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கொடூர் ஊராட்சியில் கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது இந்த முகாமிற்கு கொடூர் ஊராட்சிமன்ற தலைவர் மா. புண்ணியகோட்டி தலைமை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர் டாக்டர். ஆதித்யா வேட்டைக்காரக்குப்பம் மற்றும் செய்யூர் கால்நடை உதவி மருத்துவர் விக்னேஷ் ஆகியோர் கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சை வழங்கினர். இந்த முகாமில் 50 மேற்பட்ட பசுக்களுக்கு கால்நடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளபட்டது. முகாமில் சினை பரிசோதனை, சினை ஊசி, மலடு நீக்க சிகிச்சை, கோமரி தடுப்பூசி, குடர் புழு நீக்கம், மற்றும் ஊட்டச்சத்து மாவு போன்ற சேவைகள் வழங்கப்பட்டது. மேலும் சிறந்த மேலாண்மைக்காக மூன்று பசுக்களுக்கும் சிறந்த கிடாரி கன்றுளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த முகாமிற்கு கொடூர் ஊராட்சி வார்டு உறுப்பினர் நந்தா ஊராட்சி செயலாளர் அறிவுநிதி விசிக ஒன்றிய பொறுப்பாளர் மணவாளன் மற்றும் பொதுமக்கள் என திரலானோர் கலந்துகொண்டனர்.



▶ சென்னை மணலி புது நகரில் தமிழ்நாடு தமிழ் சேவா சங்கத்தின் சார்பாக மிக் ஜாம் புயலின் தாக்கத்தால் தன் வாழ்வாதாரத்தை இழந்த துப்புரவு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள்,1000 பேருக்கு நிவாரண பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. தமிழ் சேவா சங்கத்தின் நிறுவன அறங்காவலர் சு.பா.ஞானசரவனவேல் அறிவுறுத்தல் படி, ரூ.3000 மதிப்புள்ள அரிசி மற்றும் மளிகை பொருட்கள், தமிழ் சேவா சங்க, மாநில மக்கள் தொடர்பு அலுவலர் ராஜேஷ் மற்றும் சென்னை மண்டல அமைப்பாளர் துரை கனகராஜால் வழங்கப்பட்டது.

# 13–வது முறை : அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் ஜன. 4 வரை நீட்டிப்பு

சென்னை : டிச. 16–

அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஜனவரி 4-ம் தேதி வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 13-வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது.



சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஜூன் 14-ம் தேதி கைது செய்து, நீதிமன்ற காவலில் புழல் சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் செந்தில் பாலாஜிக்கு எதிராக அமலாக்கத் துறையினர் கடந்த ஆக.12-ல் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்தது. இதையடுத்து, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி, காணொலி காட்சி வாயிலாக சென்னை முதன்மை அமர்வு நீதிபதி எஸ்.அல்லி முன்பாக ஆஜர்படுத்தப்பட்டார். அதையடுத்து நீதிபதி, அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை 13-வது முறையாக வரும் ஜனவரி 4-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்.

# ஆந்திரா கார் விபத்தில் சம்பவ இடத்திலேயே பலியான எம்எல்ஏ

கோதாவரி : டிச. 16,

ஆந்திராவில் நேற்று நடைபெற்ற கார் விபத்தில் எம்எல்ஏ ஒருவர் பலியானார். இந்தச் சம்பவம் ஆந்திர மாநிலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்ட சுயேச்சை எம்எல்ஏ ஷேக் சப்ஜி (57). இவர் நேற்று மதியம் தனது காரில் எலூருவில் இருந்து பீமாவரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். ஷெர்குவாடா பகுதியில் அவரது கார் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த கார் ஒன்று எம்எல்ஏ ஷேக் சப்ஜி சென்ற கார் மீது அதிவேகமாக மோதியது.

இந்தக் கோர விபத்தில் இரண்டு கார்களும் மிக மோசமாக சேதம் அடைந்தது. விபத்தில் மோசமான காயமுற்ற எம்எல்ஏ ஷேக் சப்ஜி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்து குறித்து தகவலறிந்த போலீஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று எம்எல்ஏ ஷேக் சப்ஜியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கார் விபத்தில் எம்எல்ஏ பலியான சம்பவம் ஆந்திர மாநிலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



▶ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கச்சிராயன்பட்டி ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான செய்திகளை விளக்கும் சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது இக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.

# சென்னை ஏர்ணாவூர் எண்ணெய் படலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிவாரண உதவி

சென்னை , டிச,16

மிக்ஜாம் புயல் பாதிப்பால் எர்ணாவூர் ஆதி திராவிட நல காலனி பிருந்தாவன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் எண்ணெய்படலங்கால் மிகவும் பாதிப்படைந்தன பாதிக்கப் பட்டபகுதிகளில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆதி திராவிடர் காலனி மக்களுக்கு முதல் கட்டமாக 400 பேருக்கு அரிசி பருப்பு மிளகாய் தூள் மஞ்சள் தூள், சர்க்கரை, உப்பு, உடைத்த கடலை, பிரஷ், பேஸ்ட் சோப்பு, ஷாம்பு, தட்டு, டம்ளர், பாத்திரம், லுங்கி, டவல், புடவை, உள்ளிட்ட அடிப்படை தேவையான அனைத்து பொருட்களின் தொகுப்பு பை வழங்கப்பட்டது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வழங்கினார்.



முன்னதாக மழை வெள்ளம் பாதிக்கப்பட்ட புகைப்படங்களை பார்வையிட்ட உதயநிதி மக்களுக்கு என்னென்ன பொருட்கள் நிவாரணமாக வழங்கப்படுகிறது என்பதை குறித்து கேட்டறிந்தார்

நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் கே. பி. சங்கர், மாதவரம் சுதர்சனம் சென்னை மேயர் பிரியா மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே , திருவொற்றியூர் மண்டலக்குழு தலைவர் தி.மு தனியரசு, மாமன்ற உறுப்பினர் ஜெயராமன், மேற்கு பகுதி செயலாளர் வை.ம அருள்தாசன், இளைஞர் அணி அமைப்பாளர் ஆர் டி மதன் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

# காட்டுமன்னார்கோயில் எம்.ஜி.ஆர் அரசு கலை கல்லூரியில் சிறுதானியம் குறித்து விழிப்புணர்வு

காட்டுமன்னார் கோயில், டிச.16–

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய மாணவர் படை சார்பில் சிறு தானியம் உண்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது. கல்லூரியின் தேசிய மாணவர் படை அலுவலர் முனைவர் சரவணன் வரவேற்றார்.




காட்டுமன்னார்கோயில் அரசு பள்ளியின் தலைமையாசிரியர் (பொறுப்பு) ராஜீ முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர். மீனா தலைமை தாங்கி பேசினார். காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனை மருத்துவர் நிவேதித்தா சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறு தானியம் உண்பதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் சிறுவர்கள் தவிர்க்க வேண்டிய உணவு பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கமாக பேசினார். நிகழ்ச்சியல் எம். ஜி.ஆர். அரசு கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் காட்டுமன்னார்கோயில் அரசு உயர் நிலை பள்ளி, பி.ஆர். ஜி., உயர் நிலை பள்ளி மற்றும் லால்பேட்டை அரசு உயர் நிலை பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவர்கள் 120 பேர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பள்ளிகளை சேர்ந்த தேசிய மாணவர் படை அதிகாரிகள் சந்திரபாபு, சதீஷ், வேலழகன் மற்றும் கணிணி அறிவியல் துறை உதவி பேராசிரியர் ராமச்சந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர். பி.ஆர்.ஜி . பள்ளி தேசிய மாணவர் படை அலுவலர் சதீஷ் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அரசு கல்லூரியின் தேசிய மாணவர் படை அலுவலர் முனைவர் சரவணன் செய்திருந்தார்.

# பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட இருந்த விலையில்லா மடிக்கணிகள் திருடு போன செய்தி அதிர்ச்சி அளிக்கிறது : டிடிவி தினகரன்

சென்னை : டிச. 16,

பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட இருந்த விலையில்லா மடிக்கணிகள் திருடு போன செய்தி அதிர்ச்சி அளிக்கிறது என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நடைபெற்று வந்த வழக்கு விசாரணையில் ஆஜரான அரசுத் தரப்பு வழக்கறிஞர், இதுவரை 140 பள்ளிகளில் விலையில்லா மடிக்கணினிகள் திருடப்பட்டிருப்பதாக அதிர்ச்சியளிக்கக் கூடிய விவரங்களை பதிவு செய்துள்ளார்.

ஏழை, எளிய மாணவர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஜெயலலிதா, பள்ளிக்கல்வி மட்டுமல்லாது உயர்கல்வி சார்ந்த தேடல்களுக்கும் பயனளிக்கும் வகையில் கடந்த 2011ம் ஆண்டு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார். ஏழை மாணவர்களுக்கு பயனுள்ள திட்டமான விலையில்லா மடிக்கணினி திட்டத்தை இனிவரும் காலங்களில் முறையாக செயல்படுத்துவதோடு, மடிக்கணினிகள் வைத்திருக்கும் அறையை சிசிடிவி கேமிராக்கள் மூலம் கண்காணிப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ்,100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை : டிச. 16,

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 7 பயனாளிகளுக்கு ரூ.21.40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை கடனுதவியாக வழங்கினார்.



தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள். வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகமானது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நகர வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

2023-24 ஆம் நிதியாண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக, 7 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும், மீதமுள்ள 93 பயனாளிகளுக்கு நேற்றையதினமே சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் அன்னை தெரசாவளாக கூட்டரங்கில் நடைபெறும் விழாவில், அமைச்சர் பெருமக்களால் கடனுதவிக்கான காசோலைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், பயனாளிகள் வளையல் வியாபாரம், பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, பட்டு நெசவு, தையல் தொழில், அழகு நிலையம், பலசரக்கு கடை, உணவகம், துணிக்கடை, தேங்காய் மற்றும் காய்கறி வியாபாரம் போன்ற தொழில்களை மேற்கொள்ள கடனுதவி வழங்கப்படுகிறது. இக்கழகத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக அதிகபட்சமாக நபர் ஒருவருக்கு ரூ.15 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படும்.

# ஆணழகன் போட்டியில் சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரி மாணவன் சாதனை



புதுக்கோட்டை, டிச. 16- சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு இயந்திரவியல் பொறியியல் துறையில் பயிலும் மாணவன் செல்வன் யோகேஷ்வரன் ஆணழகன் போட்டியில் சாதனை படைத்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வரும் மாவட்ட அளவிலான ஆணழகன் போட்டியில் திருச்சிராப்பள்ளிக்கான போட்டியில் பங்கேற்று ஆறாம் இடத்திற்கான பரிசை வென்றார். மேலும் ப்ரீமியர் ஃபிட்னஸ் உடற்பயிற்சிக்கூடத்தில் நடைபெற்ற உள்ளரங்க போட்டியில் முதல் பரிசை வென்று கல்லூரிக்கும் அவரது உடற்பயிற்சிக்கூடத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். மாணவன் வென்ற பதக்கங்களையும் சான்றிதழ்களையும் சுதர்சன் கல்வி நிறுவனங்களின் இயக்குனர் ஸ்ரீநிவாஸனிடம் சென்று காட்டிய போது மகிழ்ச்சியுடன் பாராட்டியது மட்டுமல்லாமல் இன்னும் மேலும் நிறைய போட்டிகளில் பங்கேற்க ஊக்குவித்தார். கல்லூரியின் விளையாட்டு மன்றம் மூலமாக நிறைய சாதனையாளர்களை உருவாக்க அறிவுறுத்தினார். சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் கலியபெருமாள் உடனிருந்தார். மாணவனை சுதர்சன் கல்வி நிறுவனத்தின் தாளாளர் ஸ்ரீ விஜய்குமார் மற்றும் செயலாளர் ஸ்ரீ அஜய்குமார் பாராட்டினர்.

# கே கே வலசை, குற்றாலம், பகுதியில் ரேஷன் கடை மற்றும் பயணிகள் நிழற்குடை திறப்பு விழா



தென்காசி, டிச.16- தென்காசி மாவட்டம், குத்துக்கல் வலசையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ரேஷன் கடையினையும், குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி அருகே சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட பயணிகள் நிழற் குடையினையும், தென்காசி சட்டமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவருமான எஸ். பழனி நாடார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், காங் வட்டாரத் தலைவர் குற்றாலம் பெருமாள், பேரூர் செயலாளர்கள் குட்டி, சுடலை, காங்கிரஸ் மாநில செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ், தென்காசி மாவட்ட பஞ்சாயத்து தலைவர் தமிழ் செல்வி, துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், காங் நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், மாவட்ட பொதுச் செயலாளர் கணேசன், ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், திமுக இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, மேலகரம் பஞ்சாயத்து துணை தலைவர் ஜீவானந்தம், சத்தியராஜ், பேச்சாளர் முத்துவேல், சந்தோஷ், சித்திக், தேவராஜன், இலஞ்சி பாபநாசம், சுரண்டை தேவேந்திரன், பிரபாகரன், ரமேஷ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் தாருஸ்ஸலாம் மேல்நிலைப் பள்ளிக்கு 12ம் வகுப்பு பொதுத் தேர்வு மையம்



தென்காசி , டிச. 16- தென்காசி மாவட்டம்- கடையநல்லூர் நூற்றாண்டை கடந்த புகழ்பெற்ற தாருஸ்ஸலாம் மேல்நிலைப் பள்ளிக்கு 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுவதற்கு தேர்வு மையம் தமிழக அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதை முன்னிட்டு தாருஸ்ஸலாம் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்கப்பட்டது அதை கொண்டாடும் விதமாக சிறப்பு துவா தூரப் சைபுல்லா தைக்காவில் சிறப்பு தொழுகை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் குண்டோட்டி கீழக்கட்சி ஜமாத் தலைவர்எஸ்.எம்.ஏ. பசுலுதீன்சாகிபு, பள்ளியின் நிர்வாக குழு உறுப்பினரும், துராப்சைப்புல்லா தைக்கா, ஹக்தார்மான எஸ். எம். முஹம்மது அனீஸ், தலைமை ஆசிரியர் கே. கே. சிக்கந்தர், உதவி தலைமை ஆசிரியர் எஸ். சபருல்லா, முகமது ஹனீஸ் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகள் சிறப்பு தொழுகையில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கூவம் ஆற்றின் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் தரக் கூடாது : பாமக நிறுவனர் ராமதாஸ் கோரிக்கை

சென்னை, டிச. 16- கூவம் ஆற்றின் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் தரக் கூடாது என பாமக நிறுவனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது, சென்னை பூந்தமல்லி அருகே கூவம் ஆற்றிலிருந்து பங்காரு கால்வாய் பிரிந்து செல்லும் இடத்திற்கு அருகில் கூவம் ஆற்றின் கரையில் அமைந்துள்ள 11.50 ஏக்கர் வெள்ளப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்ட அனுமதிப்பது குறித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஆய்வு செய்து வருவதாகவும், இதற்கான தொடக்கக்கட்ட அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டதாகவும் வெளியாகியிருக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

கூவம் ஆற்றில் வழக்கத்தை விட கூடுதலாக சில ஆயிரம் கன அடிகள் தண்ணீர் திறந்து விடப்பட்டால் கூட அதையொட்டியுள்ள பகுதிகளில் வெள்ளம் ஏற்படுவது வாடிக்கை. கடந்த காலங்களில் கூவம் ஆற்று வெள்ளம் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்ததால் ஏற்பட்ட பேரழிவுகள் இன்னும் மனதை விட்டு அகலவில்லை. இத்தகைய சூழலில் கூவம் ஆற்று வெள்ளப்பகுதியில் அமைந்திருக்கும் 11.50 ஏக்கர் நிலப்பரப்பை நகர்ப்புறம் அல்லாத பயன்பாட்டுக்கான பகுதி என்ற நிலையிலிருந்து, குடியிருப்புகள் கட்டுவதற்கான பகுதி என்று வகைப்பாடு மாற்றம் செய்வது குறித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 276-ம் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் தொழில்நுட்பக் குழு இந்த வகைப்பாடு மாற்றத்திற்கு அனுமதி அளித்திருப்பதாக கூறப்படுகிறது.

சர்ச்சைக்குரிய நிலத்தின் வருவாய் ஆவணங்கள் தெளிவாக இல்லாத சூழலில், அந்த நிலத்தை குடியிருப்பு பகுதியாக மாற்ற நீர்வளத்துறையும் நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளித்துள்ளது. சர்ச்சைக்குரிய நிலத்தின் மட்டத்தை 4.325 மீட்டர் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்பது நீர்வளத்துறையின் நிபந்தனைகளில் ஒன்றாகும். அவ்வாறு செய்யப்பட்டால் அதைத் தவிர்த்து மற்ற பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊருக்குள் நுழையும் ஆபத்து உள்ளது. இந்த ஆபத்துகள் எதையும் கருத்தில் கொள்ளாமல் கட்டுமான நிறுவனங்களின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு சி.எம்.டி.ஏ செயல்படுவது நியாயமல்ல. சென்னையில் விதிகளுக்கு மாறாக கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கபட்டதால் ஏற்படும் பாதிப்புகளை அண்மையில் பெய்த மழையில் பார்த்தோம். அதிலிருந்து அரசும், சி.எம்.டி.ஏவும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். எனவே, கூவம் ஆற்றின் வெள்ளப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முதலமைச்சர் ஆணையிட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சபரிமலையில் நிலைமை சீராக உள்ளது : கேரள முதல்வர் விளக்கம்



திருவனந்தபுரம் : டிச. 16, கூட்ட நெரிசலால் திணறிவந்தசபரிமலையில் தற்போது நிலைமை சீராகி உள்ளதாககேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருவதால் அங்கு கடும் நெரிசல் ஏற்படுகிறது. இதனால் கடந்த இரு தினங்களுக்கு முன்பு சன்னிதானம் செல்லாமலே பக்தர்கள் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் 12 முதல் 16 மணி நேரம் வரை காத்திருந்து பக்தர்கள் சன்னிதானம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது.

எனவே அதனை சரிசெய்ய வேண்டும் என்று பக்தர்கள் தரப்பில் இருந்தும் காவல்துறை தரப்பில்இருந்தும்தேவசம் போர்டுக்குகோரிக்கைகள் வைக்கப்பட்டன. இதையடுத்து தரிசனத்துக்கு வரும் பக்தர்களின் முன்பதிவு குறைக்கப்பட்டது. அதனால் சபரிமலை சந்நிதானத்தில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை முதல்பக்தர்களின்கூட்டம் சற்று குறைவாக உள்ளது.

கூட்ட நெரிசலை காரணம் காட்டி கேரளாவில் அங்குள்ள அரசியல் கட்சியினர் அரசியல் செய்ய ஆரம்பித்தனர். இதற்குப் பாதுகாப்பு குளறுபடியே காரணம் என காங்கிரஸ் மற்றும் பாஜகவினர் ஆளும் அரசு மீது குற்றம் சாட்டியது. இதற்கு முதல்வர் பினராயி விஜயன் கோட்டயத்தில் பதில் தெரிவித்துள்ளார்.

“அரசின்களப்பணிகள் சபரிமலையில் மிகவும் கவனத்துடன் நடைபெற்று வருகிறது. இதனால் சபரிமலையில் தற்போது நிலைமை சீராகி அமைதியான சூழல் நிலவி வருகிறது. சென்ற ஆண்டு சபரிமலை சீசனையொட்டி பாதுகாப்பு பணிக்கு 16,070 காவலர்கள் நியமிக்கப்பட்டு இந்த ஆண்டு 16,120 பேராக அதிகரிக்கப் பட்டுள்ளனர்.


108 கோடி செலவில் ஐயப்ப பக்தர்களின் வசதிக்காக செங்கனூர், கழக்கூட்டம், சிரங்கரை, எருமேலி, நிலக்கல், மணியம் கோடு ஆகிய 6 இடங்களில் ஓய்வு மையம் அமைக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே சென்னை மழை வெள்ளம், தெலங்கானா தேர்தல் காரணமாகச் சபரிமலை பயணத்தை ஒத்தி வைத்தவர்களும் தற்போது தரிசனத்திற்கு வரத் தொடங்கி இருக்கிறார்கள். இதுவும் நெரிசலுக்குக்காரணமாக இருக்கலாம். ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு தரிசன நேரம் அதிகரிக்கப்பட்டது.

சென்ற சீசனில் இதே காலத்தில் சராசரியாக 62 ஆயிரம் பக்தர்கள் சபரிமலை தரிசனத்திற்கு வந்திருந்தனர். ஆனால் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை88ஆயிரமாக உயர்ந்துள்ளது. இந்தக் கூட்ட நெரிசல் புல்மேடு, எருமேலி காட்டுப் பாதை வழியாகப் பக்தர்களின் வருகை அதிகரித்து வருவதால் ஏற்படுகிறது.

ஆகவே இவற்றுக்கு தீர்வு காணும் வகையில் அனைத்து துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் சபரிமலையில் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. ஆண்டு தோறும் சீசன் நேரத்தில் பக்தர்கள் பலமணிநேரம்காத்திருந்து தரிசனம் செய்வது காலம், காலமாக நடைபெறும் வழக்கமான நிகழ்வு தான்” என்று பினராயி விஜயன் கூறி உள்ளார்.

## இந்தியாவில் மக்கள் வாழ்வதற்கான

# சிறந்த நகரங்கள் பட்டியலில் ஐதராபாத் மீண்டும் முதலிடம் : தேசிய அளவில் 153வது இடம்



டெல்லி : டிச. 16, இந்தியாவில் மக்கள் வாழ்வதற்கான சிறந்த நகரங்கள் பட்டியலில் ஐதராபாத் மீண்டும் முதல் இடத்தை பிடித்துள்ளது.

சர்வதேச அளவில் முதல் 50 இடங்களில் ஒரு இந்திய நகரம் கூட இடம்பெறவில்லை. உலகிலேயே வாழ்வதற்கு சிறந்த நகரங்கள் என்ற பட்டியலை மெர்சர் நிறுவனம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. வாழ்வதற்கான செலவு, அரசியல் நிலைத்தன்மை, மருத்துவ வசதி, கல்வி, கட்டமைப்பு, சமூக கலாச்சார சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பட்டியல் தயாரிக்கப்படுவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. நடப்பாண்டுக்கான சிறந்த நகரங்களின் பட்டியலை தற்போது வெளியிட்டுள்ளது.

இதில் சர்வதேச அளவில் ஆஸ்திரேலியாவில் உள்ள வியன்னா நகரம் முதல் இடத்தை பிடித்துள்ளது. அடுத்தடுத்த இடங்களில் சுவிட்சர்லாந்தின் சூரிச், நியூசிலாந்தின் ஆக்லாண்ட் ஆகிய நகரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த பட்டியலில் முதல் 150 இடங்களில் ஒரு இந்திய நகரமும் இடம்பெறவில்லை. இந்தியாவை பொறுத்தவரைஐதராபாத் இந்த பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ளது. சர்வதேச அளவிலான பட்டியலில் ஐதராபாத் 153வது இடத்தில் உள்ளது. புனே, பெங்களூரு, சென்னை, மும்பை, உள்ளிட்ட நகரங்கள் இந்திய அளவில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

வாழ்வதற்கான செலவுகள் அதிகம் உள்ள நகரங்களின் பட்டியலும் வெளியிபப்பட்டுள்ளது. இந்தியாவில் மும்பை, டெல்லி, சென்னை ஆகிய நகரங்கள்இந்தபட்டியலில் முதல் 3 இடங்களை பிடித்துள்ளன. அடுத்தடுத்த இடத்தில் பெங்களூரு, ஐதராபாத், கொல்கத்தா, புனே, ஆகிய நகரங்கள் உள்ளன. அனைத்து வசதிகளும் எளிதாக கிடைப்பதாலும் செலவு குறைவாக இருப்பதாலும் ஐதராபாத்துக்கு குடிப்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் வெளிநாடுகளில் இருந்து கல்வி பயில மாணவர்கள் வருவதும் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே 2015 முதல் 2019 வரை ஐதராபாத் இந்த பட்டியலில் இந்திய அளவில் தொடர்ந்து முதல் இடத்தை பெற்றது குறிப்பிடத்தக்கது. 2019ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, ஐதராபாத் 143வது இடத்தில் இருந்து 153வது இடத்திற்கு சறுக்கி இருந்தாலும் அனைத்து தர நிலைகளிலும் மற்ற இந்திய நகரங்களை விட சிறந்த நகரமாக இருந்து வருவதாக மெர்சர் ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

## சாத்தூர் அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில்

# உயிரிழந்தவர் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



விருதுநகர், டிச. 16- விருதுநகர் மாவட்டம், பனையடிபட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்; விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், பனையடிபட்டி கிராமத்தில் இயங்கிவந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று காலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம்,பனையடிப்பட்டி கிராமம், கண்டியாபுரத்தைச் சேர்ந்த சண்முகராஜ் (வயது 36) த/பெ. பொம்முரெட்டியார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த துயரமான செய்தியைக்கேட்டுமிகுந்த வேதனை அடைந்தேன். இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும்தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன். என்று முதல்வர் கூறியுள்ளார்.

# புளியங்குடியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் திறப்பு விழா



தென்காசி , டிச. 16- தென்காசி மாவட்டம்- புளியங்குடியில் ரஹமத் நகரில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை நகர் மன்ற உறுப்பினர் எம் முகைதீன் அப்துல் காதர் தலைமையில் மஹல்லா இளைஞர்கள் அலுவலகத்தில் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மீராசா அஹ்லுஸ் சுன்னத்துவல் ஜமாத் தலைவர் பி. என். எம். மௌலால்கவுமி திறந்து வைத்தார். சிறப்பு அழைப்பாளராக நகர் மன்ற துணைத் தலைவரும், திமுக நகர செயலாளருமான எ. அந்தோணிசாமி, வட்டார குழந்தைகள் பராமரிப்பு அலுவலர் சுமதி சங்கரன்கோவில், திமுக பொதுக்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் எம். எஸ். அப்துர் ரஹ்மான், மஹல்லா இளைஞர் அமைப்பு தலைவர் எஸ். அப்துல் ரகுமான்,பார்ட் அறக்கட்டளை நிறுவனர் ஜே. முகைதீன், தமுமுக நகர தலைவர் ஆர். சி. சையது, ஆர். அப்துல் காதர், திமுக நகர சிறுபான்மை அணி அமைப்பாளர் சேக் மைதீன், கண்ணாடி அலி, மைதீன், அன்சாரி, குஞ்சு முகமது, ரஹீம், கான், சாகுல் ஹமீது, சலீம், அபுதாஹிர், பாதுஷா, அங்கன்வாடி ஊழியர்கள் ராமலட்சுமி, திருமலைச்செல்வி நன்றி உரை ஷேக் எம். அப்பாஸ் அனைவரையும் வரவேற்று நன்றி உரையாற்றினார்.

## மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை

# கேரளாவில் பரவிவரும் புதிய வைரஸால் பாதிப்பில்லை – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



சென்னை : டிச. 16, கேரளாவில் பரவிவரும் புதிய வைரஸால் பாதிப்பில்லை என்று அம்மாநில அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

அண்டைமாநிலமான கேரளாவில்கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் தற்போது தமிழ்நாட்டிலும் கொரோனா பாதிப்பு மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது. இது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கைஎழுந்துள்ளது. இந்நிலையில் இது குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அளித்த அமைச்சர் கூறியதாவது,

சிங்கப்பூர் மற்றும் கேரளா போன்ற பகுதிகளில் கடந்த ஒரு வாரகாலமாக வைரஸ் பரவி வருகிறது. அந்த வகையில் கேரளாவில் பாதிப்பு 230 என்ற எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது. கேரளாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 1104 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். பொது சுகாதாரத்துறை இயக்குனர் கேரள சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர். அங்கே பரவி கொண்டிருக்கும் தொற்றின் பாதிப்பு குறித்து கேட்டறிந்த போது, கேரளாவில் பரவிவரும் புதிய வைரஸால்பாதிப்பில்லை என்று அம்மாநில அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிங்கப்பூரில் உள்ள மருத்துவர்களோடும், அங்குள்ள நண்பர்களோடும் பேசுகையில் அங்கே 3000க்கும் மேற்பட்டவர்களுக்கு பாதிப்பு வந்திருக்கிறது என்ற வகையிலான செய்தியை கேட்டபோது இந்த பாதிப்பு என்பது ஒரு மூன்று, நான்கு நாட்கள் தொண்டைவலி, இருமலோடு சரியாகி விடுகிறது என்ற வகையில் அவர்கள் கூறியுள்ளனர். மேலும் புதிய வைரஸால் பாதிப்பில்லை என்பதால் மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. காய்ச்சல் அதிகமுள்ள இடங்களில் ஆர்டிபிசிஆர் சோதனையை அதிகரிக்க முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாகவும் தற்போது எந்த மாதிரியான உருமாற்றம் என ஒரு வாரத்தில் தெரியவரும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கடையநல்லூர் ஜமாத் நிர்வாகிகளுக்கு அதிமுக கொள்கை பரப்புச்செயலாளர் வாழ்த்து



தென்காசி , டிச. 16- தென்காசிமாவட்டம்- கடையநல்லூர் 15,000 உறுப்பினர்களைக் கொண்ட பெரிய ஜமாத் பேட்டை பள்ளிவாசல் காதர் முகைதீன் குப்தா பள்ளிவாசல் நிர்வாக கமிட்டி தேர்தலில் போட்டியிட்ட தலைவர் பதவிக்கு ஏ. ஐ. கே. கோல்ட் தங்கமாளிகை அதிபர் அல்ஹாஜ் சையது இப்ராஹிம், கனி செயலாளர், நத்தஹர் பாவா பொருளாளர் ஆகியோருக்கு அதிமுக துணை பொதுச் செயலாளர் அய்யாதுரை பாண்டியன் சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

மேலும் ரஹ்மானியாபுரம் மேற்கு பகுதி தக்வா ஐக்கிய கூட்டமைப்பு தலைவர் முகமது அலி, அதிமுக பிரமுகர்கள் அல்யஹ்யாபீர், நைனா முகமது, அப்துல் மஜீத், கருப்பசாமி, கடையநல்லூர் பெரிய பள்ளிவாசல் யானையை மீட்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அதிமுகபொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் எடுத்துரைத்து மீட்டெடுக்க துணை நிற்போம் என்று கூறினார் பெரிய பள்ளிவாசல் சார்பாக யானை மீட்டெடுக்க சவுதி அரேபியா அம்மா பேரவை செயலாளர் எஸ். எம். மைதீன் கோரிக்கை மனுவை அய்யாத்துரை பாண்டியனிடம் வழங்கினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# இந்தியா சிமெண்ட்ஸ் புரோ லீக் கிரிக்கெட் தொடர் டிச.23–ல் தொடக்கம்



**சென்னை : டிச. 16,**

**தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து சிவில் இன்ஜினியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் இந்தியா சிமெண்ட்ஸ் புரோ லீக் கிரிக்கெட் தொடரின் 2–வது சீசன் போட்டிகள் வரும் 23–ம் தேதி தொடங்குகிறது.**

சிவில் இன்ஜினியர்களுக்கான இந்த தொடர் இரு கட்டங்களாக நடத்தப்படுகிறது. மொத்தம் 48 அணிகள் கலந்து கொள்கின்றன. சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, கோவை, வேலூர், திருவாரூர், காரைக்குடி ஆகிய 8 இடங்களில் லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு இடத்திலும் நடைபெறும் போட்டிகளில் 6 அணிகள் கலந்து கொள்ளும். இந்த வகையில் 8 இடங்களில் நடத்தப்படும் போட்டிகளில் முதலிடத்தை பிடிக்கும் அணிகள் 2–வது கட்டமான கால் இறுதி சுற்றுக்கு முன்னேறும். கால் இறுதி, அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டி பிப்ரவரி 17 மற்றும் 18–ம் தேதிகளில் சென்னையில் நடத்தப்படுகின்றன.

இந்த தொடருக்கான சீருடை மற்றும் கோப்பை அறிமுக விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்னையில் நடைபெற்றது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் தலைமை செயல் அதிகாரி காசிவிஸ்வநாதன், ஆர்.சீனிவாசன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி பார்த்தசாரதி, தமிழக விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மாநில தலைவர் எஸ்.நடேஷ், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து சிவில் இன்ஜினியர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் ராஜேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தல தோனிக்கு கௌரவம்
## 7ம் நம்பர் ஜெர்சிக்கு ஓய்வு அறிவிப்பு



**மும்பை : டிச. 16,**

**கிரிக்கெட் போட்டிகளில் தல தோனி அணிந்து விளையாடிய 7ம் நம்பர் ஜெர்சிக்கு பிசிசிஐ ஓய்வு அளிக்க உள்ளது.**

இந்திய கிரிக்கெட்டின் உச்ச வீரர்களுள் ஒருவர் மகேந்திரசிங் தோனி. இவரது தலைமையில் இந்திய அணி ஐசிசி டி20, 50 ஓவர் மற்றும் சாம்பியன்ஸ் டிராபி ஆகிய 3 உலகக்கோப்பைகளை வென்றுள்ளது. மேலும் பல தொடர்களில் இந்திய அணிக்கு வெற்றிகளை பெற்றுக்கொடுத்துள்ளார். இவரது சாதனையை இதுநாள் வரை வேறு இந்திய கேப்டன்களும் நிகழ்த்தவில்லை. இதன் காரணமாக இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கேப்டன்களில் ஒருவராக போற்றப்படுபவர் எம்.எஸ்.தோனி. தனிப்பட்ட வீரராக அதிக ரன் குவித்த வீரர்களுள் ஒருவராகவும் கருதப்படுகிறார்.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட்டிற்கு முன்னாள் கேப்டன் தோனி செய்துள்ள பங்களிப்பை கௌரவிக்கும் வகையில், அவரது ஜெர்சி நம்பர் '7'க்கு இந்திய கிரிக்கெட் வாரியம் ஓய்வு அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் '7'ம் நம்பர் ஜெர்சியை இனி இந்திய வீரர், வீராங்கனைகள் யாரும் பயன்படுத்த முடியாது. இதற்கு முன்னதாக இந்திய முன்னாள் வீரர் சச்சினை கௌரவிக்கும் வகையில், கடந்த 2017ம் ஆண்டு அவரது ஜெர்சி நம்பர் '10'க்கு பிசிசிஐ ஓய்வு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. சச்சினுக்கு பிறகு தோனிக்கு அந்த கௌரவம் கிடைத்துள்ளது.

# எம்.எஸ்.தோனி தொடர்ந்த அவமதிப்பு வழக்கில் ஐபிஎஸ் அதிகாரிக்கு 15 நாட்கள் சிறை
## சென்னை ஐகோர்ட் உத்தரவு



**சென்னை : டிச. 16,**

**கிரிக்கெட் வீரர் எம்.எஸ். தோனி தொடர்ந்த அவமதிப்பு வழக்கில் ஐபிஎஸ் அதிகாரி சம்பத் குமாருக்கு 15 நாட்கள் சிறை தண்டனை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

கடந்த 2013–ம் ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சூதாட்டம் குறித்து விசாரணை நடத்திய ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் வெளியிட்ட அறிக்கையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் தோனி சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டிருந்தார். அதன் அடிப்படையில் தனியார் தொலைக்காட்சி நடத்திய விவாத நிகழ்ச்சியால், தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறி 100 கோடி ரூபாய் மான நஷ்டஈடு கோரி கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி 2014–ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில், நிகழ்ச்சி நடத்திய தனியார் தொலைக்காட்சி, அதன் ஆசிரியர், ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. சம்பத்குமார் தாக்கல் செய்திருந்த அந்த மனுவில், உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுகள் குறித்து களங்கம் விளைவிக்கும் வகையில் கருத்துக்களை தெரிவித்துள்ளதாக கூறி தோனி தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டிருந்தது. சம்பத்குமாரின் கருத்துகள் நீதிமன்றங்களை களங்கப்படுத்தும் வகையில் இருப்பதுடன், நீதித் துறை மீது பொது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை குலைக்கும் வகையில் இருப்பதாக உள்ளது. எனவே, நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தின் கீழ் அவரை தண்டிக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஐபிஎஸ் அதிகாரி சம்பத் குமார் நீதிமன்றத்தை அவமதிப்பு செய்துள்ளதாக கூறி, அவருக்கு 15 நாட்கள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டனர். மேல்முறையீடு செய்ய ஏதுவாக, தண்டனையை 30 நாட்களுக்கு நிறுத்தி வைத்தும் நீதிபதிகள் பிறப்பித்துள்ள உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

# ரூ. 64 லட்சத்திற்கு ஏலம் போன பிரபல கால்பந்து வீரர் மெஸ்ஸி அணிந்திருந்த சீருடைகள்



**நியூயார்க் : டிச. 16,**

**பிரபல கால்பந்து வீரர் மெஸ்ஸி அணிந்திருந்த 6 கால்பந்து சீருடைகள் 64 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.**

கடந்த 2022 ஆம் ஆண்டு கத்தாரில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து தொடரின்போது அர்ஜென்டினா அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி அணிருந்திருந்த 6 கால்பந்து சீருடைகள் ஏலம் விடப்பட்டன. நியூயார்க் நகரில் நடைபெற்ற இந்த ஏலத்தில் பலரும் போட்டி போட்டுக் கொண்டு மெஸ்ஸியின் சீருடையை ஏலத்தில் எடுக்க முயற்சிகளை மேற்கொண்டனர்.

இறுதியாக 64 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய்க்கு அது ஏலம் போனது. கடந்த ஆண்டு இதேபோன்று நடைபெற்ற ஏலத்தில் 1998 என்.பி.ஏ. இறுதிப் போட்டியின் போது பிரபல கூடைப்பந்து வீரர் மைக்கேல் ஜோர்டான் அணிந்திருந்த சீருடை 83 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனதே விளையாட்டு வீரர் ஒருவரின் சீருடை அதிகபட்ச ஏலத்தில் எடுக்கப்பட்டதாகும்.

வரலாறு சினிமா

# மிக்ஜாம் புயல் : நடிகர் வடிவேலு ரூ.6 லட்சம் நிவாரண நிதியுதவி



**சென்னை : டிச. 16,**

**மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நடிகர் வடிவேலு முன்வந்துள்ளார். முதல்வர் நிவாரண நிதிக்கு இவர் பணம் கொடுத்து உதவியுள்ளார்.**

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருளாதார உதவி வழங்க பல திரைக்கலைஞர்களும் முன்வந்துள்ளனர். நடிகர்கள் சூரி, விஷ்ணு விஷால் என பலரும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு பணம் கொடுத்துள்ளனர். இந்த வரிசையில் நடிகர் வடிவேலுவும் முதல்வர் நிவாரண நிதிக்கு ரூ.6 லட்சம் கொடுத்துள்ளார். இதனைப் பாராட்டி உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது, 'மிக்ஜாம் புயல் மற்றும் கன மழையால் ஏற்பட்ட பாதிப்பை சீரமைக்க, கழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த சூழலில், அரசின் மீட்பு - நிவாரணப் பணிகளுக்கு உதவிடும் வகையில், 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு திரைக்கலைஞர் அண்ணன் வடிவேலு அவர்கள் ரூ.6 லட்சத்துக்கான காசோலையை நேற்று நம்மிடம் வழங்கினார். அவருக்கு என் அன்பும், நன்றியும்' எனக் கூறியுள்ளார்.

# கோலாகலமாக நடந்த பிரபல இயக்குநரின் திருமணம் விஷால் உள்ளிட்ட பிரபலங்கள் நேரில் வாழ்த்து



**சென்னை : டிச. 16,**

**இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரனுக்கும், பிரபுவின் மகள் ஐஸ்வர்யாவுக்கும் நேற்று திருமணம் நடந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் விஷால் உள்ளிட்ட பிரபலங்கள் கலந்துகொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.**

'திரிஷா இல்லனா நயன்தாரா', 'மார்க் ஆண்டனி' உள்ளிட்ட பல படங்களை இயக்கியவர் ஆதிக் ரவிச்சந்திரன். இவர் இயக்கி விஷால், எஸ்ஜே சூர்யா நடித்து வெளியான 'மார்க் ஆண்டனி' திரைப்படம் வசூல் ரீதியாகவும், ரசிகர்கள் மத்தியிலும் மிகுந்த வரவேற்பை பெற்றது.

இவரும் நடிகர் பிரபுவின் மகள் ஐஸ்வர்யாவும் நீண்ட நாட்களாக காதலித்து வந்ததாகக் கூறப்பட்டது. பிரபுவின் மகள் ஐஸ்வர்யாவுக்கு கடந்த 2009–ம் ஆண்டு குணால் என்பவருடன் திருமணம் நடந்த நிலையில், சில வருடங்களிலேயே விவாகரத்தில் முடிந்தது. இதை தொடர்ந்து பெற்றோருடன் வசித்து வந்த ஐஸ்வர்யா, இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரனை சில வருடங்களாக காதலித்து வந்தார். இந்த நிலையில், நேற்று இவர்களுக்கு பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் 'மார்க் ஆண்டனி' பட நட்சத்திர பட்டாளங்கள் கலந்து கொண்டுள்ளன. நடிகர் விஷால், எஸ்ஜே சூர்யா, ஜி.வி.பிரகாஷ், ஆனந்தி உள்ளிட்ட ஏராளமான திரை பிரபலங்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியுள்ளனர்.

# திருப்பதி மலைப்பாதையில் நடந்து சென்று தரிசனம் செய்த தீபிகா படுகோனே

**திருப்பதி : டிச. 16,**

**மலைப்பகுதியில் தனது குடும்பத்துடன் நடந்து போய் சுவாமி தரிசனம் செய்துள்ளார் நடிகை தீபிகா படுகோனே.**

ஒவ்வொரு பட வெளியீட்டிற்கு முன்பு கோயிலுக்கு சென்று வழிபாடு செய்வதை முன்னணி நடிகர்கள் வழக்கமாக வைத்துள்ளனர். அந்த வகையில், வெளியாக இருக்கும் தனது 'டங்கி' படத்திற்காக ஷீரடி சாய்பாபா கோயிலுக்கு சென்று வழிபாடு செய்துள்ளார் ஷாருக்கான். இந்த வரிசையில் நடிகை தீபிகா படுகோனேவும் திருப்பதிக்கு சென்றுள்ளார். ஹிருத்திக் ரோஷனுடன் இவர் நடித்திருக்கும் 'பைட்டர்' திரைப்படம் அடுத்த வருடம் வெளியாவதை முன்னிட்டே இந்த ஸ்பெஷல் தரிசனம் என சொல்லப்படுகிறது.

இந்த தரிசனத்தில் தீபிகாவுடன் அவரது தங்கை அனிஷா, பெற்றோர் பிரகாஷ் படுகோனே மற்றும் உஜ்ஜலா படுகோனே ஆகியோரும் உடனிருந்தனர். முன்னதாக அலிபிரி நடைபாதை வழியாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு திருமலை வந்தடைந்த தீபிகா இரவு பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கி நேற்று காலை விஐபி தரிசனம் மூலம் சுவாமி தரிசனம் செய்தார்.



தரிசனத்திற்கு பின் ஆலய ரங்கநாயக மண்டபத்தில் தீபிகாவுக்கு வேத பண்டிதர்கள் வேத ஆசீர்வாதம் வழங்க ஆலை அதிகாரிகள் பட்டு வஸ்திரம் அணிவித்து தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கௌரவித்தனர். தொடர்ந்து ஆலயத்துக்கு வெளியே வந்த தீபிகா படுகோனை பார்க்க அவரிடம் புகைப்படம் எடுக்க ரசிகர்கள் பெருமளவில் குவிந்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# இசையமைப்பாளர் சிற்பி பிறந்தநாள் : நண்பனுக்கு வித்தியாசமாக வாழ்த்தனுப்பிய கவிஞர் பழனிபாரதி



**சென்னை : டிச. 16,**

**இசையமைப்பாளர் சிற்பிக்கு நேற்று பிறந்த நாள். இதையொட்டி அவரது நண்பரும் பாடலாசிரியருமான பழனிபாரதி வித்தியாசமான முறையில் அவருக்கு வாழ்த்துச் சொல்லி இருக்கிறார். "சிற்பி ஓர் எளிய இசைமனிதர். வணிகவாழ்வின் தப்புத்தாளங்கள் அறியாதவர். இசைக்க இசைக்க இழையும் இனியவர். இனிய தாலாட்டு நாள் வாழ்த்துக்கள்" என்று தன்னுடைய ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டு இருக்கிறார் பழனிபாரதி.**

"சமீபத்தில் ஒரு நாள் இரவு ஓர் அலைபேசி அழைப்பு. 'பாரதி... உடுமலைப்பேட்டையிலிருந்து மதுரைக்குப் போயிட்டிருக்கேன்; பஸ்ஸில் கோகுலம் படத்தின் பாடல்கள்... உன்னோடு பேசணும்னு தோணுச்சு' என்றார் நண்பர் மகேஷ்" என்று பதிவிட்டு இருக்கும் பழனிபாரதி... 'செவ்வந்தி பூவெடுத்தேன்... அதில் உன்முகம் பார்த்திருந்தேன்' பாடலை நினைவுகூர்ந்திருக்கிறார்.

இந்தப் பாடல் தன்னை முப்பது வருடங்களுக்கு முன்னால் அழைத்துச் சென்றதாக கூறியிருக்கும் பழனிபாரதி, " விக்ரமனின் இயக்கத்தில் சிற்பியின் இசையில். 'நான் பேச நினைப்பதெல்லாம்', 'கோகுலம்' இரண்டு படங்களின் பாடல்களும் 1993–ல் வெளியாயின. பாடல்களை வெளியிட்ட லகரி இசைத்தட்டு நிறுவனம், விற்பனையில் தங்க வட்டு வெளியிட்டுப் பெருமை கொண்டது" என்று நெகிழ்ந்திருக்கிறார்.

அத்துடன், "பொன்வண்ணன் இயக்கத்தில் வெளியான 'அன்னை வயல்' பாடல்கள் இப்போதும் காற்றில் பனி தெளிக்கும் ஈரம் கொண்டவை. சுந்தர் சி-யின் 'உள்ளத்தை அள்ளித் தா'வை தொடர்ந்து, தங்கள் கூட்டணியில் உருவான 90களின் பெரும்பாலான பாடல்கள், திரையிசை ரசிகர்களின் நினைவு நாடாக்களில் தொடர்ந்து ஒலிப்பவை" என்றும் பதிவிட்டிருக்கிறார் பழனிபாரதி.

90களில் வெளியான பாடல்களுக்கு இன்னமும் உயிர்ப்பு இருக்கிறது என்பதையே பழனிபாரதியின் இந்தப் பதிவு காட்டுவதாக நெட்டிசன்கள் பதிவிட்டு வருகிறார்கள்.

# நடிகர் கஞ்சா கருப்பின் தவறான முடிவால் நேர்ந்த சோகம்.. பறிபோன ஐந்து உயிர்கள் !



**சென்னை : டிச. 16,**

**தன்னுடைய தவறான முடிவால் தன் வீட்டில் ஐந்து உயிர்கள் பலியானதாக நடிகர் கஞ்சா கருப்பு தெரிவித்துள்ளார். இது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடித்துப் பிரபலமானவர் நடிகர் கஞ்சா கருப்பு. இயக்குநர் பாலாவின் 'பிதாமகன்' படத்தின் மூலமாக அறிமுகமானார் கஞ்சா கருப்பு. அதன் பிறகு சினிமாவில் 'சிவகாசி', 'சண்டக்கோழி', 'சிவப்பதிகாரம்' உள்ளிட்ட நூறுக்கும் மேற்பட்ட படங்களில் அவர் நடித்துள்ளார். சினிமாவில் பிஸியாக வலம் வந்த காலத்தில்தான் அவர் தயாரிப்பாளராக களம் இறங்கினார். கடந்த 2014ம் ஆண்டு மகேஷ், ரகசியா நடிப்பில் உருவான 'வேல்முருகன் போர்வெல்ஸ்' என்ற படத்தைத் தயாரித்தார். ஆனால், இந்தப் படம் அவருக்கு பெரும் நஷ்டமாக அமைந்தது.

சினிமாவில் பத்து ஆண்டுகளில் அவர் சேர்த்து வைத்த மொத்த பணத்தையும் இழந்தார். இயக்குநர் பாலா இதுகுறித்து எச்சரித்ததாகச் சொன்னார். "உனக்கு தயாரிப்பு பற்றி என்ன தெரியும்? எதற்காக நீ தயாரித்து இவ்வளவு பணத்தை இழந்தாய்? நீ ஒரு நல்ல நடிகன்! அந்த பாதையில் செல் என்று எனக்கு பாலா அறிவுரை கூறியதை நான் கேட்கவில்லை. அதை கேட்டு நான் மனமாற்றம் அடைவதற்கு முன்பு எனக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டது. இப்பொழுது என் சொந்த வீட்டை விட்டுவிட்டு வாடகை வீட்டில் இருக்கிறேன். பிள்ளைகளின் படிப்பு செலவுக்கு சிரமப்படுகிறேன்.

அந்த ஒரே ஒரு படத்தினால் நான் என் குடும்பத்தில் ஐந்து உயிர்களை இழந்து உள்ளேன். அக்கா பையன், என் ஐயா, ஆயா மற்றும் மாமா என்று ஐந்து உயிர்களை இந்த திரைப்படத்தை தயாரித்ததினால் இழந்துள்ளேன்" என்று உருக்கமாக அவர் பேசியது ரசிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

# ஃபைட் கிளப் – திரை விமர்சனம்



**சென்னை : டிச. 16,**

**வடசென்னை இளைஞன் செல்வாவுக்கு ('உறியடி' விஜயகுமார்) ஃபுட்பாலில் முன்னணி இடத்துக்கு வந்து, அதன்மூலம் அரசுப் பணியில் சேர வேண்டும் என்பது கனவு.**

அதை நனவாக்க முயற்சிக்கும் பயிற்சியாளர் பெஞ்சமின் (கார்த்திகேயன் சந்தானம்), தாதாக்களின் ஆதிக்கப் போட்டியில் கொல்லப்படுகிறார். அவரைக் கொன்றவர்களில் ஒருவரான அவரது தம்பி ஜோசப் (அவினாஷ் ரகுதேவன்), சிறைக்குச் செல்கிறார். இன்னொருவர் கிருபா (சங்கர் தாஸ்), அரசியலில் நன்கு வளர்ந்து கவுன்சிலர் ஆகிறார். சிறையில் இருந்து விடுதலையாகும் ஜோசப், தனக்கு துரோகம் செய்த கிருபாவைப் பழிவாங்க, பெஞ்சமினைக் கொன்றது கிருபாதான் என்று சொல்லி, செல்வாவை அவருக்கு எதிராகத் திருப்புகிறார்.

இதனால், படிப்பு மற்றும் விளையாட்டை விட்டு விலகும் செல்வா, தனது நண்பர்களுடன் சேர்ந்து தனி கேங் உருவாக்கி, கிருபாவுக்கு எதிராக துணிந்து நிற்கிறார். ஜோசப், கிருபா மோதலுக்கு இடையே செல்வா தலைமையிலான இளைஞர்கள் என்ன ஆகின்றனர் என்பது மீதி கதை. அடிதடியில் இறங்கி அடியாளாக மாறி, சம்பவம் செய்து தாதாவாகி, அப்படியே அரசியலுக்கு வருவது போன்ற வடசென்னை கதைகள் நிறைய வந்துள்ளன. அதுபோன்ற ஒரு கதை இது. கதையின் நாயகன் விஜயகுமார் துடிப்பும், துணிச்சலுமாய் படம் முழுக்க ஓடிக்கொண்டே இருக்கிறார். ஹீரோயின் மோனிஷா மோகன் மேனன் மீது ஏற்படும் காதல், கவிதையாய் தொடங்கி சீக்கிரமே காணாமல் போகிறது.

மோனிஷா மோகன் மேனன் அழகாக வந்துவிட்டு செல்கிறார். வில்லன்களில் சங்கர் தாஸ் நேரடியாக மோதுகிறார். அவினாஷ் ரகுதேவன் பதுங்கி இருந்து பாய்கிறார். இருவருமே நேர்த்தியாக நடித்துள்ளனர். கதையும், கருத்தும் எப்படி இருந்தாலும், சொல்ல வந்ததை நேர்த்தியாகவும், உண்மைக்கு நெருக்கமாகவும் இருந்து காட்சியாக்கி இருக்கிறார் இயக்குனர் அப்பாஸ் ஏ.ரஹ்மத். அதற்கு ஒளிப்பதிவாளர் லியோன் பிரிட்டோ பேருதவி செய்துள்ளார். வடசென்னையின் குறுகலான பகுதிகளிலும் முத்திரை பதித்து இருக்கிறது அவரது கேமரா.

கோவிந்த் வசந்தாவின் பின்னணி இசை கதை மற்றும் காட்சிகளின் ஓட்டத்தை தூக்கி நிறுத்துகிறது. இளைஞர்களை தவறாக வழிநடத்தி, அவர்களது எதிர்கால வாழ்க்கையையே நாசம் செய்யும் விஷயம் எல்லா இடத்திலும் நடந்தாலும், திரையுலகம் மட்டும் என்னவோ வடசென்னையை கதைக்களமாக வைத்து, தொடர்ந்து அதை வன்முறைக்களமாகவே சித்தரித்து வருகிறது. படம் முழுக்க துரத்தல், சண்டை, ரத்தம் என்று, டைட்டிலுக்கு ஏற்ப முழுநீள 'ஃபைட் கிளப்'தான்.

வரலாறு உலகம்

# இஸ்ரேல் தாக்குதல் தீவிரம் காசாவில் இணைய சேவை மீண்டும் முடக்கம்



**காசா : டிச. 16,**

**பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் 3-வது மாதத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.**

இதில் குழந்தைகள், பெண்கள் என அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளனர். காசாவில் பலி எண்ணிக்கை 18 ஆயிரத்தை தாண்டியுள்ளது. காசா முனை முழுவதும் இஸ்ரேல் ராணுவம் தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது. வடக்கு, மத்திய, தெற்கு காசா என அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து தாக்குதல் நடக்கிறது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கான் யூனிஸ் நகரில் குண்டுகள் வீசப்பட்டன. கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 179 பேர் பலியாகி உள்ளதாகவும், 300-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கான் யூனிஸ் நகரில் ஹமாஸ் அமைப்பினர்- இஸ்ரேல் ராணுவம் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

வடக்கு காசாவில் உள்ள கமல் அத்வான் ஆஸ்பத்திரியில் இஸ்ரேல் ராணுவம் சோதனை நடத்தி வருவதால் அங்குள்ள நோயாளிகள், பொதுமக்கள், டாக்டர்கள் தவித்து வருகிறார்கள் என்று ஐ.நா. தெரிவித்து உள்ளது. இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்து வரும் நிலையில் காசாவில் மீண்டும் இணைய தள சேவை முடக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பாலஸ்தீனிய தொலைத் தொடர்பு நிறுவனங்கள் கூறும்போது, காசாவில் இணைய சேவை மீண்டும் துண்டிக்கப்பட்டு உள்ளன. காசா முழுவதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் சூழலில், காசாவின் அரசாங்க ஊடக அலுவலக தகவல் தொடர்பு முடக்கப்பட்டதால் பலியானவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களை அடைவது கடினமாக இருக்கும் என்று தெரிவித்தது.

இணைய சேவை மற்றும் தகவல் தொடர்பு முடக்கம் காரணமாக காசாவில் மீட்புப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே உணவு, தண்ணீர், மருந்து தட்டுப்பட்டால் தவிக்கும் மக்கள் தற்போது உரிய மீட்பு நடவடிக்கையும் கிடைக்காத சூழலில் உள்ளனர். இந்த நிலையில் காசாவில் பொதுமக்கள் பலியாவது அதிகரித்து வரும் நிலையில் தாக்குதலை குறைக்குமாறு இஸ்ரேலை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் தென்யாகுவுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, வரும் நாட்களில் ஹமாஸ் மீதான போரை குறைக்குமாறு தெரிவித்தார். காசாவில் பொதுமக்களின் உயிர்களை காப்பாற்ற இஸ்ரேல் அதிக அக்கறை எடுக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோபைடன் கூறியுள்ளார்.

# ஓமன் சுல்தான் இந்தியா வருகை

## இன்று பிரதமர் மோடியுடன் ஆலோசனை



**புதுடில்லி : டிச. 16,**

**ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக் மூன்று நாள் சுற்றுப் பயணமாக நேற்று இந்தியா வந்தார்.**

ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக் மூன்று நாள் சுற்றுப் பயணமாக நேற்று இந்தியா வந்தார். அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள், உயர்மட்ட அதிகாரிகளும் வருகை தந்தனர். வரலாறு, கலாச்சாரம், பொருளாதாரம் ரீதியாக ஓமன்-இந்தியா ஆகிய இருநாடுகளிடையே நீண்டகால நட்புறவு உண்டு.

குறிப்பாக, இரு நாட்டு மக்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நேரடி தொடர்பு இருந்து வருகிறது. ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக் இந்தியா வருவது இதுவே முதல் முறை எனவும், அவரது இந்த சுற்றுப் பயணம் மூலம் இந்தியா-ஓமன் இடையேயான வெளியுறவு தொடர்பு மேம்படும் எனவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அழைப்பின் பேரில், நேற்று டெல்லி வந்த ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக்கை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வரவேற்றார். குடியரசு தலைவர் மாளிகையில் பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஆகியோர் ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக்கிற்கு இன்று முறைப்படியான வரவேற்பை அளிக்கின்றனர்.

டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தை பார்வையிடும் சுல்தான் ஹைதம் தாரிக், ஹைதராபாத் இல்லத்தில் இன்று பிரதமர் மோடியுடன் ஆலோசனை நடத்த உள்ளார். அவருக்கு பிரதமர் தனது சார்பில் உணவு விருந்து அளிக்க உள்ளார். ஓமன் சுல்தானின் இந்திய சுற்றுப்பயணமானது இருநாடுகளிடையேயான பிராந்திய நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

முன்னாள் இந்திய பிரதமர்கள் ராஜீவ் காந்தி (1985), பி.வி.நரசிம்ம ராவ் (1993), வாஜ்பாய் (1998), மன்மோகன் சிங் (2008) ஓமனுக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர். தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2018-ல் ஓமன் பயணம் சென்றது இரு நாடுகளிடையேயான உறவில் மைல்கல்லாக அமைந்தது.

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தில் இருந்து மாலத்தீவு வெளியேறியது



**மாலத்தீவு : டிச. 16,**

**மாலத்தீவில் சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமது முய்சு வெற்றி பெற்றார்.**

மாலத்தீவில் சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமது முய்சு வெற்றி பெற்று பதவி ஏற்றார். சீனாவின் ஆதரவாளராக கருதப்படும் அவர், மாலத்தீவில் இருந்து இந்திய படைகள் உடனே வெளியேற வலியுறுத்தினார்.

இந்த நிலையில் இந்தியாவுடனான நீரியல் துறை ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இருந்து மாலத்தீவு வெளியேறியுள்ளது. இந்த ஒப்பந்தம் 2019-ம் ஆண்டு பிரதமர் மோடி மாலத்தீவு சென்ற போது கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய கடற்படை, மாலத்தீவில் விரிவான ஹைட்ரோகிராபிக் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறும் முடிவை மாலத்தீவு அதிகாரிகள், இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

# காவல்துறை தலைமையகத்தை குறிவைத்த பயங்கரவாதிகள்

## பாகிஸ்தானில் 3 போலீஸ்காரர்கள் பலி



**பெஷாவர் : டிச. 16,**

**தாக்குதலைத் தொடர்ந்து போலீசாருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது.**

பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினரையும் ராணுவ கட்டமைப்புகளையும் குறிவைத்து பயங்கரவாதிகள் மற்றும் கிளர்ச்சி குழுவினர் தொடர்ந்து தாக்குதல் நடத்துகின்றனர். இதில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணத்தின் டேங்க் மாவட்டத்தில் உள்ள காவல்துறை தலைமையகத்தை குறிவைத்து பயங்கரவாதிகள் நேற்று தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலைத் தொடர்ந்து போலீசாருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 போலீஸ்காரர்கள் பலியாகினர். பயங்கரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாகவும், எனினும் பெரிய அளவிலான தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு அன்சருல் ஜிகாத் என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு, தேரா இஸ்மாயில் கான் நகரில் புதிய பயங்கரவாத அமைப்பான டிஜேபி நடத்திய தாக்குதலில் 23 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர், 30 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் அரசியலில் திடீர் பரபரப்பு நான்கு அமைச்சர்கள் ராஜினாமா



**ஜப்பான் : டிச. 16,**

**ஜப்பான் நாட்டு அமைச்சரவையில் அமைச்சர்கள் 4 பேர் திடீரென தங்கள் பதவியை ராஜினாமா செய்துள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

ஜப்பான் நாட்டு அமைச்சரவையில் திடீர் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. நிதி சேகரிப்பின்போது மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பில் அமைச்சர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளதால் அதில் சம்பந்தப்பட்ட நான்கு அமைச்சர்கள் திடீர் ராஜினாமா செய்துள்ளனர். இந்த குற்றச்சாட்டுக்கு தார்மீக பொறுப்பேற்று அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் ஜப்பானிய ஆளும் கட்சியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. 2022 வரை 5 ஆண்டுகளாக சுமார் 500 மில்லியன் யென் கணக்குகளில் இவர்கள் வைப்பு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து, அதிகாரிகள் விசாரணையை தொடங்கியுள்ளனர். அமைச்சர்களின் மோசடியை அடுத்து பிரதமர் ஃபுமியோ கிஷிடாவின் அரசாங்கத்தின் செல்வாக்கு அந்த நாட்டில் கடுமையாக வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் நான்கு அமைச்சர்கள் ராஜினாமா செய்துள்ளதால் ஜப்பான் அரசு மற்றும் அரசியலில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

# ஓர் இந்து எப்படி அமெரிக்க அதிபராக இருக்க முடியும்

## விவேக் ராமசாமியின் 'வைரல்' பதில்



**வாஷிங்டன் : டிச. 16,**

**'ஓர் இந்து எப்படி அமெரிக்க அதிபராக இருக்க முடியும்?' என்ற கேள்விக்கு விவேக் ராமசாமி அளித்த பதில் வைரலாகி உள்ளது.**

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பர் 5-ம் தேதி நடைபெற உள்ள நிலையில், எதிர்க்கட்சியான குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர் தேர்வு தீவிரமடைந்து வருகிறது. குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர் பதவிக்குப் போட்டியிடுபவர்களில் ஒருவரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி, அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பலரின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். அப்போது, '' அமெரிக்காவை நிறுவியவர்களின் மதம் வேறு. உங்கள் மதம் வேறு. எனவே, நீங்கள் அமெரிக்க அதிபராக இருக்க முடியாது' என்று கூறுபவர்களுக்கு உங்கள் பதில் என்ன?" என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்த விவேக் ராமசாமி, ''நான் ஓர் இந்து. நான் என் அடையாளத்தைப் போலியாகக் காட்ட மாட்டேன். இந்து மதமும் கிறிஸ்தவமும் ஒரே மாதரியான மதிப்பீடுகளைக் கொண்டிருக்கின்றன. எனது மத நம்பிக்கையின் அடிப்படையில், ஒவ்வொரு நபரும் ஒரு காரணத்துக்காக இங்கே இருக்கிறார்கள் என்பதும், அந்த காரணத்தை நிறைவேற்றுவது நமது தார்மிக கடமை என்பதும் எனது புரிதல். ஏனெனில், கடவுள் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாழ்கிறார். நம் மூலம் பல்வேறு வழிகளில் அவர் செயல்படுகிறார். எனவே, நாம் அனைவரும் சமம்.

எனது வளர்ப்பு மிகவும் வழக்கமானது. திருமணங்கள் புனிதமானவை என்றும், குடும்பங்கள் சமுதாயத்தின் அடித்தளம் என்றும் எனது பெற்றோர்கள் எனக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள். திருமணத்துக்கு முன்பாக மதுப்பழக்கத்தை விட்டுவிடுவது சாத்தியமானது. தகாத உறவு தவறானது. வாழ்வின் இன்பங்களை அனுபவிக்க சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த மதிப்பீடுகள் மிகவும் முக்கியம் அல்லவா?

அமெரிக்காவின் மூலமாக கிறிஸ்தவத்தைப் பரப்ப நான் சிறந்த அதிபராக இருப்பேனா என்று கேட்டால், நிச்சயம் இருக்க மாட்டேன். அதற்கு நான் சரியான தேர்வு அல்ல. ஆனால், அமெரிக்கா நிறுவியுள்ள மதிப்பீடுகளை பேணிக்காக்க நான் உறுதியாக நிற்பேன்" என்று தெரிவித்துள்ளார். 38 வயதாகும் விவேக் ராமசாமி, தென்மேற்கு ஓஹியோவைச் சேர்ந்தவர். இவரது தந்தையும், தாயும் கேரளாவில் இருந்து அமெரிக்கா சென்று குடியேறியவர்கள் என்பதும், விவேக் ராமசாமி தனக்கு தமிழ் தெரியும் என்று கூறி இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொது இடத்தில் சிறுநீர் கழித்த 10 வயது சிறுவன் கைது அமெரிக்காவில் வலுக்கும் எதிர்ப்பு



**மிசிசிபி : டிச. 16,**

**அமெரிக்காவில் பொது இடத்தில் சிறுநீர் கழித்ததாக 10 வயது கருப்பின சிறுவன் கைது செய்யப்பட்டு, நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

அமெரிக்காவின் மிசிசிபி மாகாணத்தில் தாயுடன் வெளியில் சென்றிருந்த 10 வயது சிறுவன் ஒருவன், காருக்கு பின்னால் சிறுநீர் கழித்துள்ளான். இதனை பார்த்த காவல்துறையினர் சிறுவனை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு 10 வயது சிறுவனை சிறையில் பூட்டி வைத்திருந்ததாக குழந்தையின் தாய் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, நீதிபதி சிறுவனுக்கு 3 மாத காலம், காவல் அதிகாரி ஒருவரின் மேற்பார்வையில் இருக்க வேண்டும் எனவும், மறைந்த கூடைப்பந்து வீரர் கோபி பிரையண்ட் குறித்து இரண்டு பக்கங்களுக்கு எழுதி சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தண்டனை வழங்கியுள்ளார்.

தற்போது இந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கை தள்ளுபடி செய்திருக்க வேண்டும் எனவும், பொதுவெளியில் சிறுநீர் கழிக்காத ஆண்கள் அமெரிக்காவிலேயே கிடையாதா எனவும் குழந்தையின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த குற்றத்திற்காக குழந்தையை மாதம் ஒருமுறை மேற்பார்வை அதிகாரியை சந்திக்க சொல்வது, 'மேற்பார்வை தேவைப்படக்கூடிய குழந்தையாக' அவரை சித்தரிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறுவன் கருப்பினத்தவர் என்பதற்காகவே இந்த தண்டனை வழங்கப்பட்டு இருப்பதாகவும், தற்போது சர்ச்சை எழுந்துள்ளது. இதனிடையே இதுகுறித்து பேசி உள்ள காவல்துறையினர், குழந்தைக்கு விலங்கு எதுவும் மாட்டப்படவில்லை எனவும் குழந்தையிடம் சரியாக நடந்து கொள்ளாத காவல்துறை அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தற்போது நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினை பல்வேறு அமைப்புகளும் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

# கைலாசாவுக்கு வாங்க, வரவேற்கும் நித்தியின் சிஷ்யைகள்



**கைலாசா : டிச. 16,**

**நித்தியானந்தா மற்றும் அவரது சிஷ்யர்களின் பெயரால் முன்னிறுத்தப்படும் கைலாசா தேசம், கற்பனை தேசமல்ல என நித்தியின் சிஷ்யைகள் அடித்து சொல்லியிருக்கிறார்கள். மேலும் இதனை நிரூபிக்க கைலாசா தேசத்துக்கு வருகை தருமாறு இருகரம் விரித்து வரவேற்பு தெரிவித்துள்ளனர்.**

பாலியல் மற்றும் ஆட்கடத்தல் வழக்குகளில் இருந்து தப்பிக்க நாட்டை விட்டே ஓடியதாக அறியப்படுபவர் சுவாமி நித்தியானந்தா. அதன் பின்னர் ஆண்டுகள் பல ஆனபிறகும், மனிதர் எங்கே இருக்கிறார் என்பது குறித்து உறுதியும் இறுதியுமான தகவல் ஏதும் இல்லை.

பசிபிக் பெருங்கடலின் தீவு ஒன்றை விலைக்கு வாங்கி அதற்கு 'கைலாசா' எனப் பெயரிட்டு அதன் அதிபராக தன்னை அறிவித்துக்கொண்டதாக நித்தியானந்தா செய்திகளில் அடிபட்டார். கொரோனா காலத்தில் நோய்வாய்ப்பட்டதில் ஒருமுறை மரணப்படுக்கையில் விழுந்து எழுந்தார். உடல்நிலை தேறியதும், மீண்டும் இணையம் வாயிலாக தனது ஆன்மிக அலப்பறைகளையும், பக்தர்களிடமிருந்து வசூல் வேட்டையையும் தொடர ஆரம்பித்தார்.

இடையிடையே கைலாசாவை இறையாண்மை மிக்க தேசமாக நிறுவும் நோக்கில் ஐநா முதல் உதிரி தேசங்கள் வரை ஒப்பந்தங்கள் இட்டதாகவும், உரைகள் நிகழ்த்தியதாகவும், அவை தொடர்பான புகைப்படங்கள், வீடியோக்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவது உள்ளிட்டவற்றையும் நித்தியின் சிஷ்யர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அதே வேகத்தில் அந்த பதிவுகளின் பின்னிருக்கும் ஜோடிப்புகளும் அம்பலமாவதுண்டு,

இந்த வகையில் அண்மையில் பராகுவே நாட்டின் வேளாண்துறை உயரதிகாரி ஒருவர் எதேச்சையாய் நித்தி சிஷ்யர்களின் வலையில் விழுந்தார். தன்னிச்சையாய் கைலாசாவுடன் ஒப்பந்தங்களை அவர் மேற்கொண்டதுடன், அதன் இறையாண்மையை வலியுறுத்தியும் வார்த்தைகள் விட்டிருந்தார். பொதுவெளியில் இது நகைப்புக்கிடமானதில், பராகுவே தேசம் சம்மப்ந்தப்பட்ட அதிகாரி அர்னால்டோவை பதவியிலிருந்தே தூக்கியது.

இது தொடர்பான செய்திகள் உலகளவில் ஊடகங்களில் சந்தி சிரிக்க, அவற்றை மறுத்து கைலாசா சார்பில் நித்தியின் சிஷ்யைகள் நீண்ட விளக்கங்களை தந்து வருகின்றனர். அவற்றில் ஒன்றாக கைலாசாவுக்கு வாருங்கள் என அழைப்பும் விடுத்துவருகின்றனர். இதற்கு அப்பால் நித்தி பெயரில் வெளியாகி இருக்கும் அறிவிப்பு ஒன்று, 'கைலாசாவுக்கு வர முடியவில்லை என்ற ஏக்கமா? கவலையை விடுங்கள் கைலாசா உங்களைத் தேடி வரப்போகிறது' என்றொரு அதிரி புதிரி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

முனைவர் பட்ட ஆய்வுக்கான உயர்கல்வியை வழங்கப்போவதாக நித்தி அறிவித்திருக்கிறார். 'ஆன்மிகமும், அறிவியலும் கலந்ததாக, உள்ளொளியை பெருக்கும் பிஹெச்டி படிப்பை மேற்கொள்ள வாருங்கள்' என நித்தி சார்பில் அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது. வழக்கமாக கட்டண அடிப்படையிலான அருளாசி முதல் ஆன்மிக பயிற்சிகள் வழங்கி வரும் நித்தி குரூப், தற்போது முனைவர் பட்டம் வழங்க முன்வந்திருப்பதன் பின்னணி என்னவாக இருக்கும் என்ற விவாதங்கள் இணையத்தில் எழுந்துள்ளன.

# யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதி ஐரோப்பாவில் ஹமாஸ் ஆதரவாளர்கள் உட்பட 7 பேர் கைது



**பெர்லின் : டிச. 16,**

**ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியதாக டென்மார்க், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

கடந்த அக்.7-ம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் இந்த தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட அப்பாவி பொதுமக்கள் பலரும் உயிரிழந்து வருகின்றனர். சர்வதேச அளவில் இருந்து போர் நிறுத்தத்துக்கான அழுத்தம் அதிகரித்து வருகிறது. ஆனாலும் காசாவில் இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து சண்டையிடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியதாக சந்தேகத்தின் பேரில் டென்மார்க், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று பேர் ஜெர்மனி தலைநகர் பெர்லினிலும், மற்றொருவர் நெதர்லாந்திலும், மூவர் டென்மார்க்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று கைது நிகழ்வுகளுக்கும் இடையே ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்று விசாரணை நடைபெற்று வருகிறது. ஜெர்மனி மற்றும் நெதர்லாந்தில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் ஹமாஸ் இயக்கத்துடன் நேரடி தொடர்பு இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

டென்மார்க்கில் கைது செய்யப்பட்ட மூவரும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த கைது சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜெர்மனி சட்டத்துறை அமைச்சர் மார்கோ புஷ்மேன் "இஸ்ரேலிய மக்கள் மீது ஹமாஸ் நடத்தும் பயங்கர தாக்குதல்களைத் தொடர்ந்து, யூத நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் சமீப வாரங்களில் ஜெர்மனியிலும் அதிகரித்துள்ளன. எனவே நம் நாட்டில் உள்ள யூதர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக பயப்பட வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளார்.



# முகநூலில் பழகி ஆறு மாதங்கள் திட்டமிட்டு நாடாளுமன்றத்தில் தாக்குதல் : ப.சிதம்பரம்

# கோடநாடு வழக்கில் பரபரப்பு

## எடப்பாடி பழனிசாமியை ஆஜராக சொல்லுங்கள்





# மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை : கேரளாவில் பரவிவரும் புதிய வைரஸால் பாதிப்பில்லை


| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 16.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |

புதுகை

வரலாறு

நாளிதழ்

புதுமை
வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**தயாராம் சகானி** , இந்தியத் தொல்லியலாளர் (பி.1879) (இ.1939)



**மயிலை சீனி. வேங்கடசாமி** , தமிழறிஞர், எழுத்தாளர் (பி.1900) (இ.1980)



**எச். டி. குமாரசாமி** , கருநாடகாவின் 18வது முதலமைச்சர் (பி.1957)



**பரமஹம்சதாசன்** , தமிழக-ஈழக் கவிஞர் (பி.1916) (இ.1965)



## இன்றைய நினைவு நாள்

**பனகல் அரசர்** , தென்னிந்திய அரசியல்வாதி, சென்னை மாகாணத்தின் இரண்டாவது முதலமைச்சர் (பி.1866) (இ.1928)



**பி. மாதவன்** , தமிழ்த் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் (பி.1928) (இ.2003)



## வெற்றி நாள் (இந்தியா)